விலை சதம் 60 ★ பக்கங்கள் — 10

பாவியுங்கள்!
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணு பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-2-18
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற்
நீல சோப்
சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீலசோப்
பாவியுங்கள்!
விலை ரூபா ஒன்று மட்டுமே
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 22 மாசி 5 ரபி அவ் 29 ஞாயிற்றுக்கிழமை (17—2—80) இதழ் 7

# மட்டுநகர் இளைஞர் பேரவைக் கூட்டத்தில் கொந்தளிப்பு

## கூட்டணியின் போக்கில் இளைஞர்கள் அதிருப்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் புனரமைப்புச் செய்து பலப்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் ஆலோசனைக் கூட்டத்தில் கொந்தளிப்பு நிலை காணப்பட்டதாகவும், சில இளைஞர்கள் தமிழர் கூட்டணி எம். பி. க்களின் போக்கு குறித்து அதிருப்தி தெரிவித்ததாகவும் தெரிகிறது.

தமிழ் இளைஞர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழர் கூட்டணி எம். பிக்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்று நமது நிருபர் தெரிவித்தார்.

முக்கிய பிரமுகர்களில் காசி ஆனந்தன் மட்டுமே கலந்து கொண்டார் என்றும் இளைஞர்களின் சரமாரியான கேள்விகளுக்கு அவர் ஒருவரே பதிலளிகக நேர்ந்தது என்றும் நமது நிருபர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு இளைஞர் பேரவை அலுவலகத்தில்நடைபெற்ற இக்கூட்டத்தில் பத்திரிகைநிருபர்கள்எவரும் அனுமதிக்கப்படவில்லை. அழைக்கப்பட்டவர்கள்மட்டுமே கலந்து கொண்டனர்.

பட்டிருப்புஇளைஞர்பேரவை அமைப்பாளர் திரு.மதுரநாயசத்தை பொலிசார் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை என்றும் தெரிகிறது.

(-9ம் பக்கம் பார்க்க)

## சிமெந்து விலை குறைப்பு
## காங்கேசன்: ரூபா 75
## காலி: ரூபா 77

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்ட சிமெந்தின் விலை இப்போது குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாற ஆரம்பத்தில் 48 ரூபாயிலிருந்து 83 ரூபாவாக அதிக்ரிக்கப்பட்ட உள்ளூர் சிமெந்தின்விலையே இப்போது குறைக்கப்பட்டுள்ளது.

புதிய விலைகளின்படி உள்ளூரில் தயாரிக்கப்படும் காங்கேசன் சிமெந்து 75 ரூபாவாகவும், காலி சிமெந்து 77 ரூபாவாகவும்விற்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. (இ)

## புத்தாண்டு

(பீங்கிங்)

சூரிய கிரகணத்தை சீனமக்கள் நேற்று மகிழ்வுடன் கொண்டாடினர்.

சந்திரப் புத்தாண்டுதினமாக சீன மக்கள் நேற்றைய தினத்தைக் கொண்டாடினார்கள். (இ)



## இதயபூர்வமான நன்றிகள்...
### வரதன் -- சாந்தா

23-01-80 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தேறிய எமது திருமண வைபவத்தில் கலந்துஎம்மை சிறப்பித்தமைக்கும் 24-01-80 அன்று எமது இல்லத்தில் இடம் பெற்ற வரவேற்பு உபசாரங்களில் நேரில் வருகை தந்து ஆசிகூறிய உற்றூர், உறவினர், நண்பர்களுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்பிய பெரியார்களுக்கும் எமது இதயம் கலந்த நன்றிகள்.

வரதராஜன் தம்பதிகள்
இராஜன் மில்ஸ்,
புன்னாலைக்கட்டுவன்
சுன்னாகம்.

## தென்னிலங்கையிலிருந்து கிராமிய மக்கள் தலைவர்கள் 10 பேர் யாழ். விஜயம்

### சிங்கள-தமிழ் உறவுக்கு மேலும் ஒரு முயற்சி

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியைச் சேர்ந்த 40 கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 கிராமிய மக்கள்தலைவர்கள்நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இலங்கை பட்டினி ஒழிப்பு இயக்க சபையும், மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கமும் ஒன்று சேர்ந்து மேற்படி கிராமத் தலைவர்களை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்துள்ளன. கிராமத் தலைவர்கள் இன்றுமுதல் இம்மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை வரை மல்லாகத்தில் தங்கியிருப்பர்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் 'நல்லெண்ணத் தூதுக்குழுவினரைச் சந்தித்து உரையாடுவர்.

இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் 5 நாட்களிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில், நயினாதீவு, திருநெல்வேலி விவசாயப் பண்ணை, யாழ்ப்பாணம் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கிளைகள் ஆகியவற்றுக்கும் செல்லவுள்ளனர்.

இக்குழுவைச் சேர்ந்த கிராமத்தலைவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மற்றும்கிராமங்களுக்கும் சென்று கிராம மக்களுடன் உரையாடவும் ஏற்பாடு

(10-ம் பக்கம் பார்க்க)

மங்களகரமான ஆரம்பம்! புகைப்பட ரசிகர்களின் நீண்ட நாள் ஆவலை பூர்த்திசெய்ய
நவீன சந்தையில் புகைப்பட சாதனங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
19-02-1980 செவ்வாய்க்கிழமை முதல் உங்களுக்காக சேவை செய்கிறது
பாரத் சென்ரர்
புகைப்பட சாதனங்கள்–அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையம்
178, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (4988)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினையம்பதியின்சேவைக்கே தம்மை அர்ப்பணித்தவர்

நயினை நாகபூஷணி தர்மகர்த்தா பரமலிங்கம் கந்தசாமி மறைவின் ஓராண்டுப் பூர்த்தியையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

நாற்புறமும் அலையெறியும் கடல் நடுவே திடல். திரை கடலோரம் தெங்கும், பனையும் செழித்தோங்கி நிற்க, அதன் வடகரையில் அருள முதத்தை வாரி வழங்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் தேவாலயம் மூர்த்தி, தல விசேடங்களாலும், கவிவாணர்களையுடைத்தமையாலும் பெருஞ்சிறப்பும், புகழும் பெற்றது நயினாதீவு. நயினை நாகேஸ்வரியின் சேவைக்கே தமது வாழ்நாளை அர்ப்பணித்து, அன்னைக்கு ஆலயமும் அமைத்த அழியாப்புகழ் மிக்க திரு இராமச்சந்திரர் வழித்தோன்றலாகிய பரமலிங்கம் என்பவரது இரண்டாவது தவப்புதல்வரே திரு. கந்தசாமி (சாமியாபிள்ளை) அவர்கள்.

திரு. கந்தசாமி அளவுக்குக் கோல், அறிவுக்கு நூல் என்னும் தத்துவத்தையுடையராய் இளம் வயதிலிருந்தே பல்வேறு பொதுநூல்களையும், சிறப்பு நூல்களையும், தல புராண நூல்களையும் கற்று வல்லவராய் விளங்கினார்.

ஆசிரியப்பணியில் தொடங்கி விவசாயத்திலும் ஈடுபட்டார்.

நயினை வரகவி நாகமணிப் புலவரின் மகன் நாகரத்தினத்தைத் திருமணம்செய்து தாம் பெற்ற பெருந்தவப்பேருய் பத்து ஆண்மக்களையும், ஆறு பெண்பிள்ளைகளையும் பெற்றுப் பெருமையோடும் திகழ்ந்தார்கள். நயினையூராரால் என்றென்றும் வாயில் நடமாடும் வகையில் சாதனைபுரிந்தவர் தான் சாமியாபிள்ளையர்.

கஷ்டத்திலும் மதிகலங்காதவராய் வாழ்ந்த கந்தசாமி துன்பத்திலேயே ஆண்டவனைக் கண்டவர் என்றால் அது மிகவும் பொருத்தமுடையது.

அம்பாள் ஆலயத்தொடர்பினால் திருமுறைகளையும், புராணங்களையும் கேட்போர் பிணிக்கும் தகையதாகவும், உள்ளமுருகும்படி பாடுபவர் திரு. ப. க. புராணத்திற்கும் பயன் சொல்லும் இவரது தனித்துவம் அலாதியானது.

பரம்பரைத் தர்மகர்த்தா பதவியைத் தமது தந்தை பரமலிங்கம் பரமன் பதத்தையடைந்தபோது ஏற்று ஏறத்தாழ 25 வருடங்களுக்கு மேலாகப் பணிசெய்தார்.

திரு. கந்தசாமி அவர்கள் இறையடியெய்தியதும் அவரது சிரேஷ்ட புத்திரன் திரு. ப. க. கனகசபாபதி நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டார். வாரிசுரிமையினை- பரம்பரை பரம்பரையாகவே திருத்தொண்டுபுரியும் பலனடைந்த வழிவழி மரபினர்தான் கந்தசாமி பரம்பரையினர்.

எளிமையான வாழ்க்கையில்-காட்சிக்கெளியராகவும், கடுஞ்சொல் பேசாதவராகவும், எல்லோர்க்கும் நல்லோராகவும் திகழ்ந்த இவரது பேச்சு தித்திக்கும் சிறப்பில் அமைந்து காணப்படும்.

கொவ்வைச்செவ்வாயிலே புன்சிரிப்புத் தவழும் முகவசீகரமுடைய திரு. ப. க. அவர்கள் நூற்றுக்குமேற்பட்டவர்கள் (மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், (இரத்த உறவுடைய உறவினர்) புடைசூழும்படியாகத்தமது எண்பத்திமூன்றும் வயதிலே 1979-ம் ஆண்டு மாசிமாதம் 27-ம் திகதி இறைவன் திருவடியின் கீழ் இன்ப வாழ்வெய்தினார். அன்னாரது ஓராண்டு நினைவு இன்று (17-2-80) மாசிமாத பூர்வ பக்கத்துத்திதியாகிய ஞாயிற்றுக்கிழமையாகும்.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்..
.குறள்.

-ப. க. கனகசபாபதி
தர்மகர்த்தா
நயினை நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம், நயினாதீவு.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராச பாதையில் 5 பரப்புத் தோட்டக்காணிவீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில். செல்வி ஞா. நவரத்தினம், பழைய தெரு, கோப்பாய் தெற்கு. 4948

மிக நல்ல நிலையிலுள்ள 9 சிறி இலக்க 'போட் கோற்றினா' கார் விற்பனைக்குண்டு. 76-ம் ஆண்டு மாடல் 1300 CC என்ஜின் தொடர்பு- வல்லிபுரம், சட்டத்தரணி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4979

முரசுமோட்டையில் இருபோகம் செய்யும் 102 பரப்பு திறம் நெற்காணி உண்டு. தொடர்பு-வல்லிபுரம், சட்டத்தரணி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4980

எங்களிடம் நல்ல நிலையுள்ளதும் அதிக காலம் பாவனையில்லாமலுமுள்ள ராக்டரும் பெட்டியும், கலப்பையும் விற்பனைக்குண்டு, தேவைப்படுவோர் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்புகொள்ளவும். Tractor No. 36 ஸ்ரீ2448, Trailor 44 ஸ்ரீ 8056 தொடர்புகொள்ளவேண்டிய விலாசம் ஏ. எஸ். ஆறுமுகம் அன் சன்ஸ், பிரதானவீதி, ஊர்காவற்றுறை. 4969

அக்கராயன்குளம் கோணவில் சந்திக்கு அண்மையில் நீர் பாய்ச்சும் நெற்காணி விற்பனைக்குண்டு, தொடர்புகொள்ளவும் 'தைரியஸ்தான்,' 10, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 4931

## தேவை

நன்கு பாவித்த, நல்ல நிலையிலுள்ள பழைய மேசை விசிறியும், ரேப் றெக்கோட்டிரான்சிஸ்டரும். விலையை குறிப்பிட்டு எழுதவும். 'குககிருபை,' மானிப்பாய். 4981

கடைச்சல் வேலை தெரிந்தவர்களும் அலுமினியம்வார்ப்பு வேலை தெரிந்தவர்களும் தேவை. திறமைக்கேற்ப ரூபா 400 தொடக்கம் ரூபா 750 வரை சம்பளம் வழங்கப்படும். வேலை பழகுவதற்கும் சிறுவர்கள் விரும்பத்தக்கது. உடனடியாக நேரில் தொடர்புகொள்ளவும். சரவணா ஏ ஜன்சி அன் இன்டஸ்றீஸ், இல. 85, 87, கே. கே. எஸ். வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 4984

யாழ்ப்பாணம் பெரியகடையில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு நல்ல நம்பிக்கையும், நல்லொழுக்கமும், நல்லதேகசுகமும் ஓரளவு ஆங்கிலம் எழுத,வாசிக்க நன்கு பேசத்தெரிந்தவருமான பெண் விற்பனையாளர்கள் தேவை. நகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் 25-2-80க்கு முன் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 4966, C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 4966

WANTED

For immediate appointment a Nursery Teacher for eervely Creche. Apply: C/o Principal, Central College, Jaffna. 4977

## தேவை

பூநகரி குறிச்சியைச் சேர்ந்த கிராஞ்சியில் தென்னந்தோட்டத்தில் வேலைசெய்ய ஆள் தேவை. (மாதச் சம்பளம்) 'தைரியஸ்தான்' 10-ம் நம்பர் செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் விபரம் அறியலாம். 4953

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

,புங்குடுதீவு

## வெற்றுச் சாக்கு விற்பனை

1. எம்மிடம் 6000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப் பத்திரமூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப்பணமாக ரூபா250/-ம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்று 22-2-80 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புங்குடுதீவு என விலாசமிடப்பட்டு அனுப்புதல் வேண்டும். என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பின்வரும் பொருட்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு உள்ளது.

1. பாவித்த லொறி ரயர்கள், ரியூப்.
2. சுவிப்பிங் மாவு, சீனி.

பொது முகாமையாளர்
15-2-80 புங்குடுதீவு.
4982

Browmson
வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

## இரு நண்பர்களின் மர்மமரணம்:

# இறந்தவர்கள் வயிற்றில் கள்ளும் நஞ்சும் இருந்தன

## மரண விசாரணையில் டாக்டர் சாட்சியம்

(புலோலி)

கோவில் திருவிழா பார்க்கச் சென்ற இரு நபர்களின் மர்ம மரணம் பருத்தித்துறை பொலிஸ் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தும்பளையைச் சேர்ந்த சி. திருக்கேதீஸ்வரன் (வயது 29) வ. பரிமேளழகன் (வயது 37) என்ற இரு நண்பர்களுமே மர்மமாக மரணமடைந்தவர்களாவர்' இவர்களது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு தி. வேலுப்பிள்ளை மேற்கொண்டார். பருத்தித்துறை பொலிஸ் சப், இன்ஸ்பெக்டர் திரு' ரி. இரத்தினசபாபதி சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

திருக்கேதீஸ்வரனின் மரண விசாரணையின் போது அவரது சகோதரன் ஜெயம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவர் எனது சகோதரன். இவர் இன்னமும் திருமணம் செய்யவில்லை. இவர் தனியாகவே வீடொன்றில் வசித்து வந்தார். இவர் கடுமையாக மது அருந்தும் பழக்கமுடையவர். சம்பவதினம் லூர்த்து மாதா கோவில் திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். சுமார் ஒன்பது மணியளவில் கோவிலடியில் இறந்த எனது சகோதரனையும், பரிமேளழகனையும் கண்டேன். அவர்கள் இருவரும் கடும் மதுபோதையில் இருந்தனர். என்னுடன் கூட நின்ற ஜெயராசா வன்பவரையும் மது அருந்த வரும்படி அவர்கள் கேட்டனர். ஆனால் ஜெயராசா மறுத்துவிட்டார். எனவே அவர்கள் சென்றுவிட்டனர். பின்னர் நான் திருவிழா முடிவடைந்ததும் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். பின்னர் காலை அக்கா வீட்டிற்குச் செல்லும்போது இவர்கள் இருவரும் இறந்துவிட்டதாகவும், எனது சகோதரன் கணக்கிலாவத்தைப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் கிடப்பதாகவும் கேள்விப்பட்டு, அங்குசென்று பார்வையிட்டபின் இதுவிஷயம் சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசிற்கும், தும்பளை சிராம சேவை அலுவலருக்கும் அறிவித்தேன் என்றார். திருமதி இராஜராஜேஸ்வரன் கிருஷ்ணவேணியும் சாட்சியமளித்தார்.

பரிமேளழகனின் மரண விசாரணையின் போது அவரது தாய் நல்லம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது; இறந்தவர் எனது மகன். இவர் இன்னமும் திருமணம் செய்யவில்லை. கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் இவர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். இவருக்கு மனநோய் இருந்தது. மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றும் இவரது நோய் பூரணமாகக் குணமடையவில்லை. சம்பவ தினம் இரவு 8 மணிபோல் லூர்த்துமாதா கோவில் திருவிழாவுக்குச்செல்வதாகக் கூறிச்சென்றார். பின்னர் இரவு 11-30 மணிபோல் இருவர் வந்து கூப்பிட்டு பரிமேளழகர் வீதியில் விழுந்து கிடப்பதாகக் கூறினார்கள். நான் உடனே குளறிக்கொண்டு அங்கு ஓடினேன். அவர் விழுந்து கிடந்தார். அவரைச் சுற்றிச் சனக்கூட்டம் நின்றது. பின்னர் அங்கு நின்றவர்களின் உதவியுடன் வீதியில் கிடந்த அவரைத் தூக்கி வீட்டிற்குக் கொண்டுவந்தோம். பின்னர் ஆயுள்வேத டாக்டர் திரு. செல்வராசாவைக் கூட்டிவந்து காட்டினோம், அவர் இறந்துவிட்டதாகக் கூறினார். இவர் எவ்வாறு மரணமானார் என்று எனக்குத் தெரியாது என்றார்.

இறந்தவரின் சகோதரன், திருமதி வாமதேவன், சுகிர்தரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இருவரது பிரேத பரிசோதனைகளையும் மேற்கொண்ட மந்திகை அரசினர் வைத்தியசாலை டாக்டர் கதிரவேற்பிள்ளை சாட்சியமளிக்கையில்,

இறந்தவர்களின் வயிற்றுக்குள் கள்ளு, நச்சுத்திராவகம் என்பன காணப்பட்டதாகவும், நச்சுத்திராவகத்தினால் மரணம் சம்பவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)

சுற்றுலாவை மேற்கொண்டு இந்தியா வரும்போது உங்கள் பிடவைத் தேர்வுகளை விரும்பிய வர்ணங்களில் தேர்ந்தெடுக்க அழைக்கிறது!

சிவராம்ஸ்-சென்னை

எல்லா விதமான வர்ணச் சேலைகள்
காஞ்சிபுரம், மைசூர், மணிப்புரி,
பெங்களூர் சேலம், சின்னாலம்பட்டு,
காஷ்மீர் வோயில்ஸ், பெட்சிட்,
துவாய், ஜமக்காளம்
இன்னும் பல
சென்னைமாநகரில் எழில்சேர்க்கும்
புதிய நிறுவனம்



சிவராம்ஸ்,

(முன்னைய யாழ்ப்பாணம் ரொலறம்ஸ் வியாபாரிகள்)
178, சேனு பஜார், காவல்துறை நிலையம் முன்பாக,
சென்னை - 1
(4923)

MEDICAL

Married Couple. Both Medical Officers. Seek Employment. Preferably at same place. Advt No. 4974, C/o Ealanadu Ltd., Jaffna. 4974

## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

சொக்கலிங்கம் கணேஸ்வரன்

தோற்றம்: 24-6-1967 மறைவு: 27-2-1979

அன்புச் செல்வமே கணேசா!

அன்புத் தந்தை அருகிருக்க, அருமை அன்னை உனைத்தேட, கொஞ்சி மகிழும் சகோதரங்கள் கண்ணீர் சிந்த குவலயம் மறந்ததேனோ. அமரராகி ஓராண்டு தினமான இன்று தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உமது பிரிவால் துயருறும்

சொக்கலிங்கம் குடும்பத்தினர்
சுருவில் ஊர்காவற்றுறை.
4965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் விடியவில்லை.

இருளின் மூட்டம் கலையு முன்பே கனகலிங்கம் கண் விழித்துவிட்டார். ஆனுல் படுக்கையை விட்டு எழும்ப வில்லை. எழும்புவதற்குத் தெம்பு இல்லாமல் மனம் கசங்கி இருந்தது. இரவு என்ன நினைவுகளுடன் சாய்மனைக் கட்டிலில் சரிந்தாரோ அதே நினைவின் கனம் தான் இப் போதும். ஒரு முடிவுக்கு வந்து நிதானப்படாமல் மனம் தடு மாறிக்கொண்டிருந்தது. செல் லையா சொன்னது போன்று செய்து பார்த்துவிடலாம் தான். ஆனுல் விடைதெரியாத பரீட்சையில் தன் மகளின் வாழ்க்கையை சோதனைப் பொருளாக்குவது தயக்கமாக இருந்தது. மருமகனின் வாழ்க்கை சீர்திருந்தவேண் டும் தான். அதற்காக......

கனகலிங்கம் காசுக்காரன். ஒரு வார்த்தை சொன்னுரென் ருல் நான் முந்தி நீ முந்தி என்று மாப்பிள்ளைக் கனிகள் உதிரும். அந்தச் சந்தர்ப் பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது தான் இந்த முடிச்சு அவர் மனத்தில் விழுந்தது. கனகலிங்கத்தின் தங்கை மகன் தனபாலன். அவனுக்குச் சின்ன வயதில் 'என்ர மாப்பிள்ளை' என்று விளையாட்டாகக் கூறியவன், இன்று முழு ஆம்பிள்ளையாக வளர்ந்து இருக்கிறுன். அதற் காக மகிழ்ச்சியடைய கனக லிங்கம் கொடுத்துவைக்க வில்லை.

தனபாலன் குடும்ப வாழ் விலே நாட்டமின்றி வீதியில் அலைகிருன். ஏதோ ஒரு கடை யிலே பகலில் வேலை. அது முடிந்தால் நல்லூர்த் தேரடி யில் கூடும் நாலைந்து கிழவர் களுடன் உரையாடல். இர வாகிவிட- கோவிலிலே சிறு வர்களுக்கு பஜனை-போதனை...

காரில் அள்ளிவிட்டுக் கொண்டுபோன பல வேலை களில் கனகலிங்கம் தேரடி யில் அவனைக் கண்டிருக்கிருர். மடிப்புச் சால்வையை விசிறிக் கொண்டு கோவிலுக்குள் போன பல தடவைகள், பிரார்த்தனையிலே ஒன்றிய நிலையில் மருமகனைக் கண்டு முகம் சுழித்திருக்கிருர். அன் றும் இப்படித்தான். வியா பார விடயமாக கைதடி வீதி யில் அவரது கார் பறந்து கொண்டிருந்த நேரம், எதிரே வருவது......தனபாலன் தான். ஞாயிற்றுக்கிழமை. கடையில் அவனுக்குவேலைஇல்லைத்தான். அதற்காக இங்கு ஏன்?

''சார்'' என்று கார் நிற் கிறது. இறங்காமலே எட்டிப் பார்க்கிருர். கண்ணிலே கண்ணீர் வழிந்தோட...... என்ன நடந்துவிட்டது?

''தனபாலு எங்கே போயிட்டு வாருய்? ஏன் அழு கிருய்?''

''அனுதைச்சிறுவர்கள் நிலை யத்துக்கு''

''ஏன்''

''அவர்களுடன் சேர்ந்து பிரார்த்திக்க......அந்தக் கடவு ளின் குழந்தைகளோடு என் சிறிது நேரத்தைச் செலவிட''

''முட்டாள் உனக்கு வேற வேலை இல்லையா?''

''மாமா நானு முட்டாள்... இருட்டிலே இருக்கிற நீங்கள் ஒளியிலே இருக்கும் என்னைப் பார்த்து அப்படித்தான் கூறு வீர்கள்''

''போடா போ......அதுக் கேன் அழுகிருய்?''

'அந்தச் சிறுவர்களை எண் ணிப்பார்த்தால் அழுகை வரா தவன் மனிதனு?' தனபாலன் விக்கி விக்கி அழுதான். கனக லிங்கத்தின் சிரிப்பு, விரையும் காரினுள் கரைந்தது. அந்தக் காலத்தில் கனகலிங்கத்துக்கு அப்படி ஒரு நினைப்பு இருந்த துண்டு. தனபாலன் படிப்புக்கு முழுக்குப் போட்டு கடை கண்ணி என்று ஆரம்பித்த போதும் எனக்கெதுக்கு உத்தி யோக மருமகன். என்ர கடை யைப் பொறுப்பாக நடத்து கிறதுக்குப் பொருத்தமான வனுக தனபாலன் வந்திட்டால் காணும், என்றுதான் நினைத் திருந்தார். எலலாம் தனபால னுக்குப் பக்தி முற்றும்வரை யில்தான்.

அதன் பின்னர் அந்த நினைப்பையே உதறிவிட்டிருந் தார்.

ஆறிய புண்ணிலே செல் லையா மீண்டும் கிளறிவிட் டதால்தான் கனகலிங்கத்துக்கு இப்போதெல்லாம் உறக்க மில்லை.

நல்லூரில் திருவிழாக்காலம். கனகலிங்கமும் பிரமுகர் வரி சையில்.

கோயிலின் முகப்பிலே அவர் நிற்கிருர். சுத்தமான பக்திமான் வேஷம். பக்கத் தில் செல்லையா. இருவரும் ஏதோ முக்கியமான விஷ யத்தை அலசிக்கொண்டிருந்த வேளை, பக்தி மேலீட்டில் கைகட்டி தன்னை மறந்து நிற்பது... தனபாலன். இந்த மனிதப்பிறவிப் பிணி அறுக்க இரந்து வேண்டிக்கொண்டு நிற்கிருன். கனகலிங்கத்தின் முகம் சுழித்ததைக் கண்ட செல்லையாவுக்கு நெளிப்பு.

'என்ன கனகு உன்ர மரு மகன் நிக்கிறன்... நீ கவனி யாதது மாதிரி நிற்கிருய்.'

'கனகு அது உன்ர கடமை...எனக்கு மகள் இல்லை. இருந்தால் நான் அவ னுக்குத்தான் கட்டிவைப் பேன்.'

செல்லையா உறுதியாகக் கூறியது அவரது உறுதியைக் குலைத்தது.

'கனகு... மருமகனை இப் படியே திரியவிட்டால் ஊர் உலகம் என்ன சொல்லும். அவன் உன்ர தங்கையின்ர ஆவி உன்னைவிடுமெண்டு நினைக்கிறியா!'

இலாபங்களைக் கூட்டிப் பார்த்தார்' நஷ்டங்களை கழிக்க எண்ணியபோது...எப் படியும் தனபாலன் திருந்தி விடுவான். இப்படியேயா இருந்துவிடப்போகிறுன். இருந் தாலும் என்ன மூளை குழம்பி விடவில்லை. புதுநாகரிக மோகத்தில் தற்போதைய இளைஞர்கள் பித்தாகி அலைகி ருர்கள். இவனே பழமை யில்-பக்தியில்பித்துக் கொண்டு இவன் எவ்வளவோ மேலான

# பிரார்த்தனை

செல்லையர் விறுக்கென்று நடத்தார். தூரத்தில் தன்னை மறந்து பஜனை பாடிக்கொண் டும், கைகளை மார்போடு அணைத்து பிறவிப்பிணியை எண்ணி வெட்கத்தில் கூனிக் கொண்டும் நிற்கும் மருமக னைப் பார்த்தார் கனகலிங்கம். நீண்ட பெருமூச்சு சிந்தனை யின் அடித்தளத்திலிருந்து கிளம்பியது.


அதே பெருமூச்சு இப்போ தும்...

வன்தான்... கனகலிங்கம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

தனபாலனுக்கு தன் மக ளைக் கட்டிவைப்பது. அவனி டமும் ஒரு வார்த்தை கேட்க வேண்டும்.

'மாமா எனக்கெதுக்கு கலி யாணம்....மச்சாளின்ரவாழ்வு நல்லா அமையவேணும். அவன் கூறியது இவரை முடுக் கியது.

'மருமகன் ஒருசலும் நீ இப்படியே திரிய நான் விட



'ஆரு தனபாலனு? அவனுக் குப் பைத்தியம்.'

'உனக்குத்தான் பைத்தியம், பேசாம இங்காலே வா'-இழுத் துக்கொண்டு ஒதுங்கினுர். பழைய வியாபாரக் கோபத் துக்குக் கழுத்தறுக்க நல்ல தருணம் என்று நினைத்த செல்லையா நட்புரிமையுள்ள வராகப் பேசினுர்.

'கனகு நீ விசர்க் கதை பேசாதை ... அவனுக்கென்ன வியாபாரத்திலே வல்லுவிண் ணன். அவன் வேலைசெய்கிற கடைக்காறன் சொன்னவன்.'

'செல்லையா சும்மா பகிடி விடாதை.'

'இந்த வயசிலே எல்லாருக் கும் இப்படி வாறதுதான்...எல் லாம் ஒரு கலியாணத்தோட சரியாப்போயிடும்.'

'ம்...அப்ப பேசிச் செய்து வைக்கவேண்டியதுதான்.'

'கனகு என்ன கதை கதைக் கிருய்...அவன் தாயும் தகப் பனும் ஆரை நம்பி விட்டிட்டு பரலோகம் போனதுகள்... நீ ஒருத்தன் இருக்கிருயெண்டு தான் அதுகளின்ர ஆத்மா நிம்மதிப்பட்டது.'

'அதுதான் பேசிச் செய்வ மெண்டிறன்.'

'என்ன பேசிறது? நீயே ஒரு குமரை வீட்டுக்குள்ள வைச் சுக்கொண்டு என்ன பேசிறது.'

'செல்லையா.'

'அவன் வியாபாரத்திலை வல்லுவிண்ணன். இப்ப கிரக மாற்றத்தாலேயும், வயசுக் கோளாறுலேயும் திருப்புகழ் பாடிக்கொண்டு திரிகிறுன். கலியாணத்தோட திருந்து றுன இல்லையா எண்டு பார்.'

'அதுக்காக என்ர மகளை....'

'முருகா' அதே ஆழத்திலி ருந்து அழைப்பும் கிளம்பியது அவரது மனம் ஒரு முடிவுக் கும் வரமுடியாமல் குழம்பிக் கொண்டிருந்தது, எதைச்செய் தாலும் லாப நஷ்டக் கணக் கைப் பார்ப்பவர் அவர். சீத தனம் என்று கைகொள்ளா மல் அள்ளிக்கொடுத்து ஒரு வனை மாப்பிள்ளையாக்க அவன் தனது தோளில் ஏறி நின்றே முதுகில் குத்திவிட்டால்...மரு மகன் தனபாலனுக்கு மகளை

மாட்டேன் ... நீயும் வாழ வேணும்.' உனக்கென்ன குறை.'

'மாமா நீங்க இருட்டிலை இருக்கிறனீங்க இப்படித்தான் சொல்லுவீங்க.'

'இருட்டும் வெளிச்சமும். மருமகன் நான் சொல்லிறபடி தான் நீ நடக்கவேணும்.'

கனகலிங்கம் எல்லா ஏற் பாடுகளையும் முடித்துவிட் டார். கல்யாணமும் முடிந் தது. முதலிரவு.

## காவலூர் எஸ். ஜெகநாதன்

முடித்துவைத்துவிட்டால்... கைக்கு அடங்கியிருப்பான். வியாபாரங்களையும் பார்த்து மேய்த்துக் கொண்டிருப்பான். எல்லாவற்றுக்கும் பைத்தியம் தெளியவேண்டும்.

தெளியுமா? திருமணம் முடிந்துவிட்டால் தெளியும் என்கிருன் செல்லையா. விஷப் பரீட்சையாகிவிடுமா? அதற்கு என் மகளையே பலியாக்கு வதா? இப்படி இருந்து சம் சாரசாகரத்துள் மூழ்கி உரு மாறிய எத்தனையோ உதார ணங்களை கூறினுனே செல்லை யன். தங்கையின் மகனுடைய எதிர்காலத்துக்காக துணிந்து தன் மகளையே கட்டிவைத் தான் கனகலிங்கம் என்று ஊர் புகழும்படி.

இரவிரவாக உறக்கமில்லை. தனபாலன் திருப்புகழ்பாடி னுன். அருணகிரிநாதர் கதை சொன்னுன். தாயென்ன தாரமென்ன என்று தத்து வமே பேசினுன். பக்திமார்க் கத்தில் தனது அனுபவங்களை விளக்கினுன்.

ஆரம்பத்திலே அவன் மனை விக்கிருந்த உற்சாகம் நேரம் கரையக் கரைய குறைந்து சலிப்பாகியது.

'கடவுளே நீதான் கதி யென்று இருந்தன், கண்ணை மூடிக்கொண்டு நல்லூர் தேர் அருகில்...பக்தா அழைப்புக் கேட்டு விழித்தால் அருகே ஒரு சாமியார் படார் என்று அவர் காலிலே விழுந்துவிட் டேன்.' அவன் பரவசமா னுன். இதோடு அவன் கூறிய



காலில் விடு படலம் திருெ வது...காவியுடையைக் கண் டால்போதும் காலில் விழுந்து விடவேண்டியதுதான்.

அவள் தூக்கக் கலக்கத்தில் கண் லங்கினுள். 'திவ்விய ஒளியில் இருப்பவர்களுக்கு தூக்கமே வாரது' என்று விட்டு தொடர்ந்து கூறிக் கொண்டே இருந்தான்.

எப்போது அவளை தூக்கம் அரவணைத்தது என்றே தெரி யாது. அவன் எழுந்தபோது விக்கி விக்கி அழுதுகொண்டி ருந்தாள் மனைவி

தனபாலனின் கண்களிலும் கண்ணீர். 'என்னை மன்னிச்சுக் கொள்'முன்னரே மாமாவிடம் சொல்லியும் அவர் கேட்க வில்லை.

அவளிடம் அழுகை கூடியது.

''என்னை மன்னிச்சுக் கொள்'' தனபாலன் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

கல்யாணமழையின் தூவான மும் அடங்கிவிட்டது. தன பாலன் கடைக்குப் புறப்பட்டு விட்டான். எதிராக நின்ருர், கனகலிங்கம் கையிலே கடைத் திறப்புடன்.

''மருமகன்......இனி நீங்க பிறத்தியாற்ற கடைக்குப் போறதா......நம்மட கடை யிருக்க''

தனபாலன் பின்வாங்கினுன்.

''மாமா காதற்ற ஊசியும் வராது காணுன் கடை வழிக்கே. சொன்னவர் பட்டி னத்தார். என்னிடம் பொறுப்பா'' மறுத்துவிட்டு அவன் போய்விட்டான். மாலை யில் நல்லூரின் தேர். அருகில் வழக்கமான உரையாடல். இரவு கோவிலில் பிரார்த் தனை. ஞாயிற்றுக்கிழமை மரு மகன் வீட்டில் இருக்கும்போது விரிவாகக் கதைக்கலாம் என்று எண்ணியிருந்தார் கனகலிங் கம். தனபாலனே அதி காலையே கைதடி அனுதை நிலையத்துக்கு புறப்பட்டுவிட் டான்.

மனம் கலங்கி விறைத்துப் போய் இருந்த மகளைப் பார்த் தார். துயர்தாள முடிய வில்லை. பெருமூச்சுடன் சாய்மனைக்கதிரையில் வந்து சரிந்தார்.

ஆளைப்பார்க்கவென்று மாலை யில் வந்திருந்தார் செல்லையா. அவர் முகத்தைப் பார்க்கவே மனமில்லை கனகலிங்கத்துக்கு. ''கனகு ஊர் முழுக்க உன்னைப் புகழுது தங்கைக்காக தலை கொடுத்த அண்ணன்'' என்று குத்தல்.

''தலையைக் கொடுத்தாலும் சந்தோஷப்படுவன்......மக ளின்ர வாழ்வைக் கெடுத்து... ம்...ம் அவனுக்கென்ன கெட்டா அலையிருன் கடவுள் பத்தியிலை''-கனகலிங்கம் தன் னைத் தேற்றிக்கொண்டு நிமிர்ந் தார். செல்லையா போட்ட தடத்தில் விழுந்துவிட்டா லும் விழுந்ததுபோல் காட்டக்கூடாது என்ற எண் ணம்.

விழுந்ததை உணர்த்தும் துடிப்பு செல்லையாவிடம்.

''கனகு பக்திமாதிரி நடிக் கிறதைத்தான் உலகம் மதிக் கும். உண்மையான பக்தியை பைத்தியக்காரத்தனம் என்று தான் கேலி செய்யும்''

செய்ததையும் செய்துவிட்டு இப்போது இதயத்தையும் குத்திவிட்டு போய்விட்டார் செல்லையா.

இரவின் கருமை உலகைப் போர்த்திக்கொண்டிருந்தது. உள்வீட்டுக்குள் கட்டிலில் கிடந்து உள்ளம் குமுறிக் கொண்டிருந்தாள் மகள். கனக லிங்கம் சாய்மனைக்கதிரையில் மனத்தில் துயரத்தின் கனத் தோடு கிடந்தார்.

தனபாலன்......

நல்லூரானின் வாசலில் பிரார்த்தனையில் மூழ்கி தெய் வத்துக்கு மிக அருகில் இருந் தான். தான் மட்டுமே ஒளியில் இருப்பதாக அவனுக்கு நினைப்பு. (யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் கட்டுரை:

# தூக்கமா?

கோகிலா மகேந்திரன்

நித்திரையை நினைவு கொள்ளத்தக்க வகையில் கும்பகர்ணன் என்ற ஒரு தனிக் கதாபாத்திரத்தையே உருவாக்கித் தந்தது எமது பழைய இலக்கியம். 'நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கழித்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்' என்று தூக்கத்தால் ஏற்படும் இழப்பைக் கவிதையில் வடித்தான் இக்காலக் கவிஞன் ஒருவன். நீண்டகாலம் தூங்காமல் இருந்து சாதனை நிலை நாட்டியவர் ஒருவர் உண்டு. தூக்கத்தைப் பெறுவதற்காக வாழ்வில் வேறு எதையும் இழக்கத் தயாராக இருப்பவர்களும் எம்மிடையே உண்டு. 'படிக்க முடியாமல் நித்திரை நித்திரையாக வருகிறதே! இச்சோதனை முடியும் வரையாவது நித்திரை வராதிருக்க ஏதாவது மாத்திரை தாருங்கள்' என்று டாக்டரைத் தேடிப் போகின்ற மாணவர்கள் பலர் இருக்கும் அதே வேளையில், நித்திரை வரவில்லை என்று தூக்க மாத்திரைகளை விழுங்கித் தள்ளுகின்ற பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். எங்கள் எல்லாரையும் இப்படிப்பல வகைகளில் ஆட்டிப்படைக்கின்ற தூக்கத்தைப் பற்றிய சில தகவல்களை அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியந் தானே!

## தூக்க நேரம்

சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 8 மணித்தியால நித்திரை தேவை என்று சொல்லப்பட்டாலும், இந்த நேரம் 5-10 மணித்தியாலம் வரை பரந்து இருப்பதாகத் தெரிகிறது. 8% மக்கள் 5 மணி நேரத் தூக்கமே பெறுகிறார்கள் என்றும் 13% மக்கள் 10 மணிநேரம் தூங்குவதாகவும் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. ஆகவே தூக்க நேரம் ஆளுக்காள் மாறுபடுவது மிகத் தெளிவு. சாதாரணமாக வளர்ந்தவர்களை விடக் குழந்தைகள் அதிக நேரம் தூங்குகிறார்கள். உங்களது தூக்க நேரம் எவ்வளவு என்று எப்படி அறிந்துகொள்வது? நீங்கள் தேவைக்கு அதிகமாகத் தூங்குகிறீர்களா? அல்லது தேவையைவிடக் குறைவாகவே தூங்குகிறீர்களா? இந்தக் கேள்விக்கு விடைகாண வேண்டுமானால்... எந்த விதமான மனத்திகைப்போ, சஞ்சலமோ, கவலையோ இல்லாத அமைதியான ஒரு காலத்தை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு நாளில் நீங்கள் நித்திரை வரும்போது உறங்கச்சென்று அலார மணிக்கூடு எதுவுமின்றி நித்திரை விடும்போது எழுந்திருங்கள். இந்தத் தூக்க நேரமே பெரும்பாலும் உங்களது சாதாரணத் தூக்க நேரமாகும்.

## வயது

வயது தேவையான நித்திரையின் அளவை மாற்றியமைக்கிறது என்று கூறுவதைவிட. நித்திரையின் ஆழத்தை மாற்றுகிறது என்பதே அதிகம் பொருத்தமாகும். குழந்தைகளில் காணப்படும் ஆழமான நித்திரை, கட்டிளமைப் பருவத்தில் குறைந்து, முதியவர்களில் துப்புரவாக அற்றுப்போகிறது. முதியவர்கள் பெரும்பாலும் பூனைத்தூக்கம் போடுபவர்களாகவே இருக்கிறார்கள்- ஆகவே எவ்வளவுதான் நித்திரை செய்தாலும் இவர்கள் நித்திரையை ரசித்து அனுபவிப்பதில்லை என்றே கூறலாம்.

## இடைவிட்ட தூக்கம்

8 மணி நேரமும் தொடர்பாக நித்திரை செய்வதே சிறந்தது என்று கருதப்படுகிறது. துண்டு துண்டாக நித்திரைசெய்து இந்த 8 மணி நேரத்தையும் பெறுபவர்கள் விரைவில் களைப்படைந்து உற்சாகம் குன்றிப்போவது அவதானிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், போர் வீரர்கள் செய்வதுபோல்...எமது இதயம் செய்வதுபோல்... அடிக்கடி ஆறுதல் எடுத்துக்கொண்டால் நாம் களைப்படைய முதல் ஆறுதல் எடுத்துக் கொண்டால்- எமது விழிப்பு நேரத்தினை அதிகரித்துக்கொள்ளலாம் என்று 'டேல் கானேஜி' கூறியிருக்கிறார். மாலை நேரத்தில் ஒரு கோழித்தூக்கம் போட்டு அதன் பயனாய் இரவில் நெடு நேரம் விழித்திருப்பவர்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள். இரண்டு நாள் வேலையை ஒரு நாளிலே தான் முடிப்பதற்குக் காரணமாய் அமைந்தது இந்த மாலைத் தூக்கந்தான் என்று 'வின்ஸ்ரன் சேர்ச்சில்' சொல்வாராம்.

## ஆவர்த்தன இயல்பு

ஒவ்வொருநாளைய இருபத்தி நாலு மணி நேரத்திலும் எமது உடல் இயக்கத்தில் ஓர் ஆவத்தன இயல்பு காணப்படுகின்றது. உடல் வெப்பநிலை, குருதியில் அதிரீனல் ஓமோன்களின்மட்டம்..இவைகளிலும் கூட இவ்வாறான ஒரு இயல்பு காணப்படுவதால்... நாம் தூங்கச்செல்லும் நேரத்திலும் ஒழுங்கான ஒரு வழக்கத்தைக் கைப்பற்றுவது நல்லது. வழக்கமாக நித்திரைக்குச் செல்லும் நேரத்தில் ஒரு நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது தூக்கம் கண்ணைச் சுழற்றி அடித்ததும் நண்பர் சென்ற பிறகு படுக்கைக்குப் போய் தூக்கம் வராமல் தவித்ததும்...நாம் எல்லோரும் பெரும்பாலும் பெற்ற அனுபவங்கள்தான். எமது இருபத்திநாலு மணி நேர ஆவர்த்தன வட்டத்தில் நித்திரைப் புள்ளி வந்து நாம் அதைக் கலைத்துவிட்டதால் அது திரும்பிப் போய்விட்டதே இந்த அனுபவத்திற்குக் காரணமாகும்.

## நித்திரை உதவிகள்

சிலருக்குப் புத்தகம் வாசித்தால் மட்டுமே நித்திரை வரும்! வேறு சிலருக்கு டெலிவிஷன் பார்க்க வேண்டும். இன்னும் சிலருக்கோ ரேடியோப் பாட்டுக் காதில் விழுந்துகொண்டே இருக்க வேண்டும். சில குழந்தைகளுக்கு (சில பெரியவர்களுக்குந்தான்) வாயில் எதையாவது மென்றுகொண்டிருந்தால்தான் தூக்கம் அண்மிக்கும். இந்த நித்திரை உதவிகள் எல்லாம் பழக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டவையே!

தூங்கச் செல்லுமுன் ஒரு கோப்பை பால் அருந்தினால் நித்திரை சுலபமாக வந்துவிடும் என்பது ஒரு நம்பிக்கை. பாலில் 'திரிப்ரோபான்' என்ற அமினோ அமிலம் காணப்படுகிறது. இந்த அமினோ அமிலம் அதிகளவில் உட்கொள்ளப்படும் போது ... தசைநார்களை அது தளர வைக்கிறது. ஆகவே பாலுக்கும் நித்திரைக்கும் தொடர்பு இருப்பது விஞ்ஞான ரீதியில் உண்மையாக இருக்கலாம். மது, நரம்பு மையங்களை மந்தப்படுத்துமாதலால் பலருக்கு அது சுலபமாக நித்திரையை வரவழைக்கிறது. ஆயினும் சிலரை அது அரித்து அவர்களைத் தூண்டிவிடுவதால் நித்திரை செய்யமுடியவில் போவதும் உண்டு எப்படியும் அதிக அளவு மது நல்ல தூக்கத்தைக் கலைத்துவிடும் என்று நம்பலாம்,

## வராத நித்திரை

நடு இரவில் திடீரென விழித்துக்கொண்டு, பின் நித்திரை வராமல் அவதிப்படுவது வயது போனவர்களில் சகஜமாகக் காணப்படும் பழக்கம். வாழ்க்கைப் போராட்டங்களும் அதனால் ஏற்படும் தகைப்புகளுமே இதற்குப் பெரும்பாலும் காரணமாகும். இந்த நேரங்களில் படுக்கையில் இருந்துகொண்டு நித்திரைக்குப் போராடுவதால் எந்தவித பயனுமில்லை. வாசித்தல், கடிதங்களுக்குப்பதில்எழுதுதல் அடுத்த நாளைய வேலைக்குத் தேவையான குறிப்புகளைத் தயார்செய்தல் போன்ற பயனுள்ள தகைப்பற்ற வேலைகளில் ஈடுபட இந்த நேரத்தைப் பயன்படுத்தப் பழகிக் கொண்டால் மீண்டும் நித்திரை தானாக வரத்தொடங்கி விடும்.

## தூக்க மாத்திரைகள்

எல்லா நாடுகளிலுமே தூக்கமாத்திரைகளின்பாவனை இப்போது அதிகரித்து வருகிறது. நோயாளிகளோ அல்லது வைத்தியர்களோகூட இந்த மாத்திரைகளின் கெடுதியை முற்றிலும் உணர்ந்து நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. ஒரு தூக்கமாத்திரையை நாம் அருந்தும்போது அது நமது தூக்கத்தில் மாத்திரமே ஒரு விளைவை ஏற்படுத்தப்போகிறது என்று நாம் கருதுவது முற்றிலும் தவறானதாகும். நுண்மதியின் தொழிற்பாட்டைக் குறைத்தல், நரம்பு மையங்களை மந்தப்படுத்தல்போன்ற பல விளைவுகள் நித்திரை விட்டெழுந்த பின்பும்கூட நிலைத்திருக்கின்றன. ஆகவே 'பாபிற்றுறேற்' தூக்கத்தின் பின் வருகின்ற பகற்பொழுதும் கூட இவர்களுக்கு நல்ல முறையில் அமையமுடியாது. தூக்கமாத்திரைகளின் முக்கியமான தீங்கு யாதெனில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தாங்கும் தன்மையை ஏற்படுத்திக் கொண்டு மீண்டும் நித்திரை வராத நிலையை அடைந்து மாத்திரையின் அளவை அதிகரித்துச்செல்லத் தூண்டப்படுதலாகும். இந்தநிலையே சிலரை மரண வாசல்வரை அழைத்துச் செல்லப்படுகிறது.

ஆகவே நல்ல ஆழ்ந்த தூக்கத்தைப் பெறுவதற்கு ஒழுங்கான நித்திரைப் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள். அடிக்கடி நித்திரை நேரத்தை மாற்றாதீர்கள். கோப்பி, புகையிலை போன்ற தூண்டிகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நாள்தோறும் சிறிதளவு தேகாப்பியாசம் செய்யுங்கள். நித்திரைக்காக எந்த விதமான மாத்திரைகளையும் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சரி! போவோமா? எங்கே என்று கேட்கிறீர்களா? தூங்கத்தான்!

(ஆதாரம்: டாக்டர் யூலியஸ் சீகல்)

# பாடசாலைப் பிள்ளைகளின் வாய் சௌக்கியம்

பல் வைத்திய கலாநிதி
கி. நித்தியானந்தன்

அனைத்துலக ஆரோக்கியக் கழகம் 'நோய் இல்லாமல் இருப்பதுதான் ஆரோக்கிய மல்ல, பௌதிகநிலை, மனோநிலை, சமுதாயத்துடன் பழகுதல் முதலியவை நன்னிலையில் இருப்பதுதான் ஆரோக்கியம்' என்று வரையறுக்கப்படுகின்றது. பொது ஆரோக்கியத்தில் இருந்து வாய்க்குரிய ஆரோக்கியத்தைப் பிரிப்பது சாத்தியமல்ல. பூரண ஆரோக்கியம் நிலவுவதற்கு ஒருவரின் பற்கள், முரசுகள், நாக்கு, அண்ணம் முதலியவை முற்றிலும் சரியான நிலையில் இருக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளையினுடைய வாய் ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது. இதற்குரிய முக்கியத்துவத்தை நாம் அளிக்கவேண்டும். நாம் பிள்ளைகளின் சமூகத்திற்குச் சமூகம் சம்பந்தமான கடமைப்பாடுள்ளவர்களாக இருக்கிறோம். ஏனெனில் இவர்கள் நமது தேசிய செல்வங்கள். அத்துடன் இவர்கள் எதனையும் மனதில் பதிக்கும் ஆற்றல் உள்ளவர்கள், ஏற்றுக்கொள்ளும் திறன் மிக்கவர்கள். இவர்களின் மனத்தில் நல்ல வாய்ச்சுகாதாரப் பழக்கங்களைப் பதிப்பதற்கு இதுவே சிறந்த வயதாகும்.

வாயில் காணப்படும் இரண்டு பொதுவான நோய்கள் கடினமான இழையங்களைப் பாதிக்கும். பற்சொத்தையும் பற்களின் தாங்கும் இழையங்களைப் பாதிக்கும் முரசு நோய்களும் ஆகும். பற்சொத்தை அசாதாரணமானது. இதனை நாகரிக வளர்ச்சியின் நோய் என்று அழைக்கலாம். ஏனெனில் இது ஆதியான சமூகங்களில் அறியப்படவில்லை. இந்நோய் தொடங்கினால் பல்லை சத்திர சிகிச்சையால் அகற்றும்வரை அல்லது நோயுற்ற இழையத்தை அகற்றி அவ்விடத்தை அடைக்கும்வரை ... முரசு நோய்கள் ஆரம்பத்தில் குணமாக்கப்படக்கூடியவை. ஆனால் கவனியாமல் பராமரிக்காமல்விட்டால் குணமாக்க முடியாத நிலையை அடைந்து இறுதியில் பற்களை இழக்க நேரிடும். நம்நாட்டில் மனிதர் பற்களை இழப்பதற்கு பற்சொத்தையல்ல, முரசுநோய்களே முக்கிய காரணமாகுமெனலாம்.

இவ்விரு நோய்களும் பற்றீரியாக்களால் தோற்றுவிக்கப்படுகின்றன என்று அறியப்பட்டுள்ளது. பல்லில் மேற்பரப்பில் ஒட்டிக்கொண்ட நுண்ணங்கிகளின் சேர்க்கை 'பற்றீரியாவிற்குரிய பிளாக்' எனப்படும் உணவுப் பதார்த்தங்களைப் பிளாக் எனக் கொள்ளக்கூடாது. இவை பல்லுடன் சேர்ந்தவை அல்ல. பிளாக் பல்லுடன் மிகவும் இறுக்கமாக ஒட்டியிருப்பதால் வாயை நீரினால் கழுவினாலும் அகலாது." ஆனால் இதனைப் பற்றூரிகையினாலேயே அகற்றலாம். பிளாக் பலவகையான தொழிற்பாடுகளுள்ள பல வகையான பற்றீரியாக்களைக் கொண்டது. சில பற்றீரியாக்கள் வெல்லங்களை அமிலமாக மாற்றுகின்றன. இந்த அமிலங்கள் மிளிரியைக் கரைப்பதனால் குழிகளை உண்டாக்குகின்றன. வேறு சில பற்றீரியாக்கள் நச்சுத்தன்மையான பதார்த்தங்களைத் தோற்றுவிக்கின்றன. இவை முரசு நோய்களை ஏற்படுத்துகின்றன.

பிள்ளைகளில் காணப்படுவதும் இளம் வயதில் இருக்கக்கூடியதுமான நிலை உருக்குலைந்த பற்களாகும். இது Matocclusion எனப்படும்.. இது ஆரம்பத்திலேயே அறியப்பட்டுக் குணமாக்கப்பட வேண்டும். ஏனெனில் இது



பின்பு உளவியல் சம்பந்தமான பிரச்னைகளை ஏற்படுத்தலாம். இலங்கைத்தீவிலுள்ள பெரிய வைத்தியசாலைகளில் இந்நிலையைத் திருத்துவதற்கான வசதிகள் இருக்கின்றன. இது Orthodontice சிகிச்சை எனப்படும்.

பற்சொத்தை பெரிய பிரச்னையாகக் காணப்படவுமில்லை. சிலருக்கு ஒரு பல்லிலாவது குழி இல்லை. ஆனால் ஏறக்குறைய 98% குழந்தைகளில் முரசு நோய்கள் ஆரம்ப கட்டத்தில் இருந்தன. இது கல்லடைப்பு என அழைக்கப்படுகின்ற மென்மையான படிவுகள் பல்வேர்களில் இருப்பதாலேயே ஏற்படுகின்றது. 62% பிள்ளைகள் கரியையும் தமது விரலையும் உபயோகித்தே பல் துலக்குகிறார்கள் என்பது ஆய்வின் போது வெளிப்பட்டது. 1% பிள்ளைகளே பற்றூரிகையை உபயோகிக்கிறார்கள். தூரிகையை உபயோகியாததற்குப் பொருளாதார நிலைமையே காரணமெனக் கூறமுடியாது. அதனை உபயோகிப்பதன் பெறுமதியை அவர்கள் அறியாமையே காரணமாகும். ஏனெனில் உயர் பதவியிலுள்ள பெற்றோரின் பிள்ளைகள் கூடப் பற்றூரிகையை உபயோகிக்கவில்லை. 60% பிள்ளைகள் நாளாந்தம் ஒருதடவையே பல் துலக்குகிறார்கள். 51% பிள்ளைகள் இருதடவைகள் துலக்குகிறார்கள். பல் துலக்கும் பொதுவான நேரம் காலையாகும்,8% பிள்ளைகள் தாம் பிற்பகலில் குளிக்கும்போது பல் துலக்குவதாகக் கூறினார்கள். 30% பிள்ளைகள் பல்வலிக்கு வீட்டு வைத்தியங்களைக் கையாளுகிறார்கள். 19% பிள்ளைகள் கிராமத்திலுள்ள மந்திரவசப்படுத்துபவரிடம் சென்று மந்திரிப்பார்கள். இவர் பல்வலி நிபுணர் எனக் கருதப்படுகிறார். 9% பிள்ளைகளே வைத்தியசாலைப் பல்நோய்ப் பிரிவுக்குச் செல்கின்றனர். தமக்குக் கிடைக்கும் அருமையான வைத்திய வசதிகளை இப்பிள்ளைகள் சிறப்பாகப் பயன்படுத்துவதில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

பல்நோயைப்பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே இருக்கின்றது 50% பிள்ளைகளுக்கு பல் எவ்வாறு சிதைவடைகின்றது என்பது தெரியாது. 18% பிள்ளைகளே பற்சிதைவு பற்றீரியாக்களால் ஏற்படுகின்றது என்பதை அறிந்துள்ளார்கள். 62% பிள்ளைகள் முரசு நோய்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் முதல் நாவலும் அதன் ஆசிரியரும்

தமிழில் நவீன நாவல் இலக்கியம் தோன்றி 100 ஆண்டுகளாகின்றன. மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் பிரதாப முதலியார் சரித்திரம் என்ற இந்த நாவலை எழுதினர். அந்நாவலைப் பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் சுருக்கமாக இங்கு ஆராயப்பட்டுள்ளது. ஆர். சத்தியன் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையிலிருந்து இதனை வர்ணம் தொகுத்துத் தருகின்றார்.

ஆர். சத்யன்

தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் 1879-ம் ஆண்டு சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. இதனை எழுதியவர் வேதநாயகம்பிள்ளை என்பவராவார். இவர் இந்திய புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். இவர் தமது வாழ்வின் பெரும் பகுதியை ஒரு மாவட்ட முன்சீப் பதவியில் சிறப்பாகப் பணியாற்றிக் கழித்தார். ஆனல் பிற்காலத்தில் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. விசாரணையின் பின் கௌரவத்தோடு அவர் குற்றமற்றவர் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் பதவிக்காலம் முடியு முன்னரே தமது நீதித்துறைப் பதவியை விட்டு விலகி எழுத்துத் துறையிலும் அறிஞர்கள் பண்டிதர்களோடு தர்க்கம் செய்வதிலும் வாழ்நாளை கழிக்கலானர்,

ஏறத்தாழ பத்து ஆண்டுகளின் பின்னர் பிள்ளையவர்கள் "சுகுணசுந்" என்ற பெயரில் ஒரு நாவலை எழுதி வெளியிட்டார். அவருக்கு மிகவும் பிடித்தமான பெண்களின் முன்னேற்றம் சம்பந்தமான கருத்துக் கொண்டதாக இந்தக்கதை இருந்தது. ஆனல் அவரது முதல் நாவல் தான் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. இன்றும் வாசகர்களைக் கவருவதாய் இருந்து வருகின்றது.

## வேறு ஆக்கங்கள்

இந்த இரு நாவல்கள் மாத்திரமின்றி அன்றைய சமயப் பூசல்களைத் தணிக்கும் வகையிலும் மூடநம்பிக்கைகளிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் வகையிலும் கவிதைகளையும் எழுதினர். இசைப்பாடல்களாக அவர் எழுதிய கவிதைகளை இன்றும்கூட பொது மேடைகளில் பாடகர்கள் பாடுவதைக் கேட்கலாம். அவரது ஆக்கங்களில் கிண்டலும் நகைச்சுவையும் நிறைந்து காணப்பட்டது. அவரது பாடல்களில் அங்கதச்சுவை அதன் உச்ச நிலைக்குச் சென்றிருப்பதைக் காணலாம். இந்த பண்புகள் அவரது நாவலிலும் விரவிக் காணப்படுகின்றன.

தமது நாவலின் முகவுரையில் ஆங்கிலத்தில் வெளிவரும் நாவல்களுக்கு - வசனகாவியங்களுக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கைக் கண்டதினலும், தமிழ்மொழியில் பெரும்பாலும் கவிதைகளே இயற்றப்படுவதனல் அவைபோன்ற வசன காவியகள் தமிழில் இல்லை என்பதை உணர்ந்ததினலும் தமிழில் இந்த வசன காவியத்தை தாம் எழுதத் துணிந்ததாக அவர் மிகவும் அடக்கமாகக் கூறுகிறர்,

## ராஜா - ராணி கதை

ஆங்கிலத்தில் எவரிடமிருந்து தாம் உந்துதல் பெற்றார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. ஆனல் தமிழர்கள் ராஜா-ராணி கதைகளைக் கேட்பதில் விருப்பமுடையவர்கள் என்று தெரிந்து வைத்திருந்ததால் ஆண் உடையில் இருக்கும் தனது கதாநாயகி ராஜ்யத்தை ஆளும் அரசனக மாறும் வகையில் கதையை சோடித்ததாக அவர் கூறுகின்றர், இந்த கற்பனைச் சம்பவத்தை வைத்துக் கொண்டு குடியரசு ஆட்சியையும் முடியாட்சியையும் பற்றி அவர் விரிவாக ஆராய்ந்துள்ளார். முடியாட்சியையே அவர் விரும்பியதாகத் தெரிகின்றது. கலாச்சாரப் பண்பாடுகளை வளர்ப்பதில் சுதேச மொழியின் பங்கு, பொது வாழ்வில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது, உயர்மட்ட நிலைகளில் நிலவும் ஊழல்கள் பற்றியெல்லாம் அவர் அலசியுள்ளார்.

கதாநாயகன் ஒரு நிலபுலன் படைத்த வசதியுள்ள பணக்கார இளைஞன். அவனது பிறப்பு வளர்ப்பு எல்லாம் விபரமாக விளக்கப்படுகின்றது. இங்கு ஆசிரியரின் கல்வி பற்றிய உயர்ந்த எண்ணங்கள் வெளிவருகின்றன. ஆனல் கதாநாயகிதான் அதிக இடத்தைப் பிடித்துக்கொள்கின்றள். ஆசிரியர் கனவு காணும் லட்சியப் பெண்ணின் லட்சணங்கள் கதாநாயகி மூலம் படம் பிடித்துக் காட்டப்படுகின்றது.

சுவையான பல தொடர் சம்பவங்கள் மூலம் கதாநாயகனும் கதாநாயகியும் வளர்வதையும் அவர்களுடன்தொடர்புள்ள குடும்பங்களையும் ஆசிரியர் விவரிக்கின்றர். சமூகத்தில் காணப்படும் பல மூட நம்பிக்கைகளை அவர் சுட்டிக் காட்டி அவைகளைத் திருத்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திச் சொல்கின்றர். சீர்திருத்தக் கருத்துக்கள் ஆங்காங்கே காணப்பட்டாலும் கதை சொல்லும் திறமையை அது பாதிக்கவில்லை. சில வேளைகளில் சற்று நிறுத்தி சில நல்லொழுக்கப் பண்புகளை வலியுறுத்தவும் தவறவில்லை.

## அன்றைய சமூக வாழ்வு

அன்றைய சமூக அமைப்பு ஜீவனுள்ள விதத்தில் கதையில் இடம்பெற்றுள்ளது. கதையில் சமூகவியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

காட்டில் வைத்து கணவனும் மனைவியும் பிரிந்துவிடுகிறர்கள். மனைவி ஞானம்பாள் (கதாநாயகி) பாதுகாப்பின் நிமித்தம் ஆண் போல உடைதரித்துக் கொண்டு காட்டில் தனியாகச் சுற்றிவருகிறர். இச்சமயத்தில் அவ்வழியே வந்த வனவாசிகளின் அரண்மனை யானை அப்பெண்ணைத் தூக்கிச் சென்றது. அவள் அந்த வனவாசிகளின் அரசராக்கப்படுகிறள். புத்திசாலித்தனமாகவும் சிறப்பாகவும் அவள் ஆட்சிபுரிகின்றள். நாவலின் மூன்ரும் பகுதி கல்வி, ஆட்சிமொழி, மற்றும் பொது விஷயங்களில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவன பற்றி விபரிக்கிறது. அந்தக் கானகத்து இளவரசி ஆண் உடையிலிருக்கும் கதாநாயகி மீது காதல்கொள்ளத்தொடங்குகிறள். 'அரசர்' (கதாநாயகி) திருமண நாளை பின்போடுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் சுவையாகவுள்ளவை. அத்துடன் கதைசொல்வதில் கதாசிரியரின் திறமையும் வெளிப்படுகின்றது. இதே வேளை ஞானம்பாள் தனது கணவனின் வருகைக்காகக் காத்திருக்கிறள். இறுதியில் அவன் வந்து சேர்கிறன். காதலர்கள் ஒன்று சேரும் இந்தச் சம்பவம் கதையின் உயிரூட்டமுள்ள அம்சமாகவிருக்கின்றது.

இருவரும் தம்மை காட்டு மக்களுக்கு வெளிப்படுத்திக் கொள்கிறர்கள். இளவரசியை இளவரசன் ஒருவனுக்கு மணமுடித்துவைத்து அவனிடமே ராஜ்யபாரத்தையும் கையளிக்கிறர்கள். பின்னர் தம் நாடு திரும்புகிறர்கள்.

## நகைச்சுவை

கதை முழுவதிலும் ஆசிரியரின் நகைச்சுவை உணர்வு விரவிக் கிடக்கின்றது. கதை சுவையாக இருக்கவேண்டும் என்பதற்காக சாதுரியமான நகைச்சுவைச் சம்பவங்களைச் சிறப்பாகப்புகுத்தியிருக்கிறர். கதைப் போக்கிற்கு ஏற்ருற்போல் அவைகளைப் பொருத்தமான இடங்களில் செருகியிருக்கிறர். ஆனல் இது கதைசொல்லும் பாணியைத் தளர்த்திவிடுகிறது. அதேசமயம் தான் பார்த்த சமூக வாழ்க்கையை கற்பனை நிறைந்த ஆக்க இலக்கியமாக்குவதில் சிறப்படைந்துள்ளார்.

வேதநாயகம்பிள்ளை அவர்களின் எழுத்தின் தாக்கம் எப்படிப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு இரண்டு சிறு முக்கிய சம்சவங்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டலாம்.

## கதாநாயகனின் பாட்டனர்

முதல் சம்பவத்தில், கதாநாயகனின் பாட்டனருக்கு நவாப்பின் ராஜ்யத்தில் ஓர் அரச பதவி கிட்டுகின்றது. ஒரு தினம் பக்கத்துக் காடுகளில் சவாரிசெய்துகொண்டு வருகையில் குதிரையில் வந்த வேறு இருவரைச் சந்திக்கிறர். அவர்களின் மூத்தவன் குதிரையிலிருந்து கீழேவிழுந்து காயமடைகிறன். பாட்டனர் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச்செல்கிறர். அவ்விருவரும் முஸ்லிம்கள் என்று தெரிந்துகொண்ட போதிலும் இந்துவான அவர் தமது வீட்டில் வைத்துத் தேவையான உதவிகளைப்புரிந்து அனுப்புகிறர். சில நாட்கள் கழிந்தபின் நவாப்பின் தர்பாருக்கு வரும்படி பாட்டனருக்கு ஆணைவருகிறது. ஆனல் தர்பாரில் தமக்கு வேலை எதுவும் இல்லையென்று கூறிப் போக மறுத்துவிடுகிறர். ஆனல் நவாப்பின் ஆணையை மீறிய அவரை சேவகர்கள் வந்து கட்டாயமாக அழைத்துச் செல்லுகிறர்கள். அரச தர்பாருக்கு அழைத்துச் செல்லப்பட்ட பாட்டனருக்குஅங்கேஅதிர்ச்சி காத்திருந்தது. காட்டில் வைத்து தாம் காப்பாற்றி உதவி புரிந்த வீரர்கள் வேறு யாருமில்லை. நவாப்பும் அவரது உதவியாளரும்தான் என்பதை அவர் தெரிந்துகொள்கிறர். மன்னர் தர்பாரில் அவருக்கு ஒரு பதவி வழங்கப்படுகிறது. ஆனல் அதனை ஏற்றுக்கொள்ள தயங்கும் அவர், 'ஏற்றுக்கொள்கிறேன் மறுக் [illegible] நகைச்சுவைபட கூறுகிறர். அதன்பின் மன்னர் அளித்த அரச பதவியில் புகழ்பெற்று விளங்குவதோடு ஏற்கனவே உள்ள சொத்து சுகங்களோடு மேலும் சொத்துக்களைச்சேர்த்துக்கொள்கிறர்.



மாயூரம்
வேதநாயகம்பிள்ளை

அடுத்த சம்பவம், ஆசிரியரின் சீர்திருத்த நோக்கங்களையும் நகைச்சுவையையும் எடுத்துக்காட்டுகின்றது,

அக்காலத்தில் திருமணங்கள் நிச்சயமானதின் பின்னர் இரு தரப்பினரும் ஓர் இடத்துக்கு வருவார்கள். தரகர்களின் உதவியுடன் பேசித் தீர்க்கப்படும் பல திருமணத் தம்பதி ஜோடிகள் ஓர் இடத்தில் கூடும்போது சில சமயம் தவறுதலாக மாப்பிள்ளைகள் மாறி தாலிகட்டிவிடுவதும் உண்டு. ஏற்பாட்டுத் திருமணங்களின் குறைபாடுகள்பற்றி ஆசிரியர் குறிப்பிட்டபோதிலும் சந்தர்ப்பவசத்தால் அவ்வாறு கூடும் தம்பதிகள் பின்னர் மனமொத்து வாழ்வார்கள் என்று கூறத் தவறவில்லை.

## மேல்நாட்டு கதைகளின் தாக்கம்

வேதநாயகம்பிள்ளை தாம் ஆங்கிலக் கதைகளில் படித்த நிகழ்ச்சிகளையும் புகுத்தியுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. ஹென்றி பீல்டிங்கின் 'த கிஸ்டறி ஒப் டொம் ஜோன்ஸ்,' சேர்லான்டேயின் 'டொன் குயிக்ஸ் ஓட்டே' போன்ற கதைகளிலிருந்து பிள்ளையவர்கள் உந்துதல்பெற்றிருக்கிறர். பின்னதின் செல்வாக்கு கதையில் அதிகம் மெருகோடியுள்ளது. சூரிய கிரகணம் ஏற்பட்டு நாடே இருளில் மூழ்கிவிடும் என்று கூறப்படும் ஆருடம் எச். றைடர் ஹக்கார்டின் 'கிங் சொலமன்ஸ் மைன்ஸ்' கதையில் வரும் சம்பவத்தை நினைவுறுத்துகின்றது. ஏனைய எல்லா நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் சொந்தக் கற்பனைகளாகவே தென்படுகின்றன.

வேதநாயகம்பிள்ளையவர்களின் காலத்திற்குமுன்னர் ஏனைய மொழிகளில் நாவல்கள் யாத்துள்ள முன்னேடிகளின் ஆக்கங்களுடன் இவரது நாவலை ஒப்பு நோக்கும் போது இது எந்த விதத்திலும் தரம் குறைந்ததாகத் தெரியவில்லை. பக்கிம் சந்தர் எழுதியதைப் போன்று இதுவும் ஒரு நல்ல கதைதான். சந்துமேனன் எழுதிய 'இந்துவேக்கா'வுடன் ஒப்புநோக்கும் தரமுள்ளது. இந்துவேக்காவே அந்தக்காலத்தில் உருவாக்கப்பட்டிருந்த ஒரே ஒரு நகைச்சுவை ஆக்கம் எனலாம். சந்துமேனன் தமது கதையில் ஒழுக்கத்தையும் சீர்திருத்தத்தையும் புகுத்தவில்லைதான், ஆனல் இந்த தமிழ் ஆசிரியரின் காவியப்படைப்பின் வேகத்துக்கு அவரது ஆக்கம் ஈடுகொடுப்பதாய் இல்லை.

இருந்தபோதிலும் ஆங்கில ஆசிரியர்கள் கையாண்ட நகைச்சுவைப் போக்குகளை இந்திய வாசகர்களும் வாசிக்க உதவியவர்கள் என்ற கௌரவத்தை இருவரும் பெறுகிறர்கள்,

இருவருமே பெண்மைக்கு முதலிடம் கொடுக்க முனைந்திருக்கிறர்கள். தமது கதாநாயகிகள் அறிவுள்ளவர்களாகவும், விஷயம்புரிந்துள்ளவர்களாகவும் சமயத்துக்கேற்ப புத்திசாதுர்யத்துடன் நடந்துகொள்பவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்,

நாவல் இலக்கியம் நவீன உத்திகளுடன் வளர்க்கப்பட்டு வரும் இந்தக்காலத்தில் தமிழ் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் வேற்றுமொழியினரும் படித்து அனுபவிக்கும் விதத்தில் ஏதாகிலும் செய்தாகவேண்டும். திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆராயப்படவும் வேண்டும்.

---

சுவைஞர் கருத்து

## ஒரு விமரிசனம்

தை மாத முதல் வார மலரில் இடம்பெற்ற சிறுகதையான 'பெரிய சிறிய மனிதர்கள்' என் நெஞ்சை விட்டு நீங்காதிருக்கின்றது.

ஒன்ருகப் படித்து, ஒரே மட்டத்தில் வளர்ந்து உத்தியோக விழைவால் வேலை கிடைக்காத வறியவளான தன்மையால் மணமாகியும் வாழ்விழந்த பெண்மையால், பெரிய-சிறிய மனிதர்களுக்கிடையில் நடைபெற்ற யதார்த்தமான, இன்று நடைமுறையில் காண்கின்ற - உண்மையான வாழ்க்கைகளை- குடும்பங்களை - நேருக்கு நேர் காட்டி நிற்கிறது. அந்த பெரியசிறியமனிதர்கள். நன்ருகப் படித்திருந்தும் தன் பாடசாலை வாழ்க்கையில் தான் விரும்பிய-தான் அடைய நினைத்த மங்கையை- உத்தியோக உயர்வால் பெரியவராகி பலருக்கு வேலைவாய்ப்பு தேடிக் கொடுத்தும் - பெற்றுக் கொண்டிருக்கும் அந்த பெரிய மனிதன்...... வறியவளாய் - வாழ்விழந்து-வாழ முனையும் அப்பெண்ணிற்கு வேலை வாய்ப்பளிக்க பின்னிற்பது அப்பெண்ணிடம் எதிர்பார்க்கும் பணமா? அன்றேல்......? இரண்டையும் எதிர்பார்க்கும் இச்சமூகத்தின் படித்த, வளர்ச்சி அடைந்த 'பெரிய மீன்கள்' சிறிய மீன்களை ஏப்பம் விட்டுக் கொண்டே இருக்கின்றன.

எல்லாப் பிரச்னைகளையும் 'சிம்பிள்' பிரச்னைகளாக்கித் தங்களை பெரியவர்களாக்கும் 'பெரியவர்களை' இக்கதையினுள் காணக் கூடியதாய் இருக்கிறது.

இப்படியான சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் கதைகளை 'ஈழநாடு' பிரசுரிப்பதில் முன்னிற்பது பத்திரிகையின் வளர்ச்சிக்கு உகந்ததாக அமையும் வேளையில், இக்கதையை உருவகம் செய்த ஐ. சண்முகலிங்கத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

- வே. அரியம்,

மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## நடிகர் ஒன்றியத்தின் நல்நோக்கம் வளர்க!

கலையின் நிலை உயர, கலைஞர்களின் தொழிற்பாடுகள் உத்வேகம் பெற, கலைஞர்கள் மத்தியில் பரஸ்பரம் உறவு வளர்க்கப்பட வேண்டும்; இச்சூழல் ஆக்கப்பணிக்கு விசை கொடுக்கும் முயற்சி என்ற உண்மையை அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்ட கலை உலா வேளை உணர முடிந்தது. கலாச்சாரப் பேரவை நடாத்திய தேசிய தமிழ் நாடகப் போட்டிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து டங்கு கொள்ளச் சென்ற நாடக அரங்கக் கல்லூரியினருக்கு மகத்தான வரவேற்பை-வேண்டிய உதவிகளை முன்வந்து உதவியது, நடிகர் ஒன்றியம். போட்டிக்கு முதல் நாள் 6-2-80ல் 'லயனல் வென்ட்' தியேட்டரில் பெருந்தொகையைச் செலவிட்டு, நடிகர் ஒன்றியத்தின் ரசிகர் அவைக்காக 'பொறுத்தது போதும்' நாடகத்தை மேடையேற்றுவித்தனர். ஒரு பிரதேசத்தைச் சார்ந்த நாடகக் குழுவுக்கு இன்னொரு பிரதேசத்தில் இயங்கும் கலைக்குழு பரஸ்பரமாக ஓத்தாசை புரியும் பண்பு மெச்சப்படவேண்டிய, வளர்க்கப்படவேண்டிய பண்பே. இச்சூழல் தமிழ்க்கலைக் குடும்பத்தின் துரித நடையை இன்னும் உந்தி உயர்திடும் எனலாம்.

மாணவியுமான செல்வி சுந்தரகுமாரியின் மிருதங்க அரங்கேற்றம் வட்டு. தொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு தம்பதிகளும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தம்பதிகளும் தலைமை தாங்க ஆயிரக்கணக்கான கலைஞர்கள், ரசிகர்கள் முன்னிலையில் மிகத்தரமான இசைக்கச்சேரியாக அமைந்தது. அரங்கில் இசை மழை பொழிந்தார் முன்னைநாள் தவில் வித்துவான் கனகசபாபதியின் புதல்வியும் சங்கீத வித்துவானுமாகிய செல்வி ராஜலட்சுமி அவர்கள் பாட்டுக்களை உணர்ந்து உணர்ந்து பாவம் தொனிக்கப்பாடி ரசிகப் பெருமக்களை ஈர்த்துப்பிடித்தார். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு விரிவுரையாளர் செல்வி தனதேவி சுப்பையா அவர்கள், குளிர்ச்சியும் குழைவும் கூடிக்குலாவி வர அபாரமாக வயலின் வாசித்தார். மேடையிலே கச்சேரி செய்ய வேண்டுமாயின் அதற்குரிய தரம் மிகமுக்கியமாகும். மேடையிலே சோடை போகக் கூடாது. இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது தரமான வித்துவான்களுக்கு தான் தக்கதோர் பக்கவாத்தியம் என்பதை மிருதங்கம் வாசித்த செல்வி சுந்தரகுமாரி நிரூபித்து விட்டார். அட்சரசுத்தம்,

**கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை**



## வளரும் பயிரை முளையில் தெரியும்

'பொப்' இசை என்ற இறக்குமதிச் சரக்கின் ஆக்கிரமிப்பு வளர்ந்து வரும்இக்காலகட்டத்திலே, பெண்கள் பெரும்பாலும் ஈடுபடப் பின்னடிக்கும் மிருதங்கத் துறையிலே முறையாகப் பயிற்சி பெற்று ஆசிரியத் தராதரப்பத்திரம் பெற்று அரங்கேற்றம் செய்தாள் ஓர் இளம் பெண் என்றால் அது வியப்புக்குரிய விடயம்தானே!

சென்ற 2-2-80 சனிக்கிழமை மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மிருதங்க அரங்கேற்றத்தைதான் குறிப்பிடுகிறேன். காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் அவர்களின் புதல்வியும் பிரபல மிருதங்க வித்துவான் ப. சின்னராசா அவர்களின் இலக்கணச்சுத்தம், விறுவிறுப்பு ஆகிய சிறப்புக்களுடன் தொப்பியில் எழுப்பிய சுத்தமான நாதத்தினால் இத்தனை சிறு வயதில் இத்தனை நறுக்குத் தெறிக்க எப்படி வாசிக்கிறார் என அவையோர் மூக்கில் விரல் வைத்து வியக்கும் வண்ணம் வாசித்தார். ஞானபாவமும் பயிற்சித் திறனும் பளிச்சிட வாசித்து பாராட்டுப்பெற்றார். தனி வாசிப்பில் வித்துவான்களையும் ரசிகர்களையும் ஈடுபடவைத்து அவர்கள் தாளம்போடத் தூண்டும் வகையில் பஞ்சநடையையும் பவனிவரவிட்டார். பல்லவியில் காலப்பிரமாண கணக்குப் பரீட்சையில் தமது அசுர சாதனை மூலம் வித்துவான் சின்னராசாவின் முத்திரை பொறித்து அஞ்சலி செய்தார். கடம் வாசித்த சங்கீத ரத்தினம் செல்வன் [illegible] தாளமேதாவிலாசம் விளங்கச் சக்கைபோடு போட்டார். இந்த அரங்கேற்ற இசைக்கச்சேரி ஒரு முழுமையான கூட்டு முயற்சி. முக்கியமாகப் பெண்கள் பங்குகொண்டு இசை விருந்தளித்து பூரண திருப்தியை ரசிகர்களுக்கு நல்கினர்.

## அவைக்காற்று கழகத்தின் 'மழை' 'இடைவேளை' 'பாலைவீடு'

அவைக்காற்றுக் கழகத்தின் 'மழை', 'இடைவேளை' என்ற நாடகங்கள் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. நிர்மலா நித்தியானந்தன் முக்கிய குணசித்திரத்தில் திறம்பட நடிக்கும் 'பாலை வீடு' என்ற நாடகம் திரும்பவும் மேடையேற்ற இருக்கும் செய்தியை நெறியாள்கை செய்யும் பாலேந்திராவிடம் அறிந்தபோது பெருமகிழ்வு ஏற்பட்டது.

## சித்திரைக்கு முன் நாடக விழா

யாழ். நகரில் நாடகவிழா ஒன்றினை நாடக அரங்கக் கல்லூரி சித்திரை மாதத்துக்கு முன் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. ரசிகர்களின்வரவேற்பை பெற்ற 'கோடை', 'கூடி விளையாடு பாப்பா', 'பொறுத்தது போதும்' உட்பட தரமான நாடகங்கள் பல விழாவில் இடம்பெற இருக்கின்றன. கிராமிய மட்டத்திலும் இவ்விழா பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## கல்கியின் ஒரு சொல்

''ஔவையாராக நடிக்கும் ஷண்முகத்துக்கு இந்த நடிப்புக்காகவே நோபல் பரிசு வழங்கலாம்'' என்று 'கர்நாடகம்' என்ற புனைபெயரில் கல்கி எழுதினாராம். அந்த நோபல் பரிசு என்ற சொல் ஷண்முகத்துக்குப் பெரும் உற்சாகத்தைக் கொடுத்ததாம். தொடர்ந்து ஐம்பது தடவைகள் ஔவையாராக [illegible] அந்தச் சொல்தான் உயர்ச்சத் [illegible] இருந்ததாம்.

---

**இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும்வளர்ச்சியும்**

# மத்திய வகுப்பின் வளர்ச்சிக்கான காரணங்கள்

''யாழ்ப்பாண மக்கள் ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட மிசனரிமாரின் பாடசாலைகளிற் தங்கியிருக்கவேண்டியிருக்கிறதென்பதை'' சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கைச் சட்டசபையிலே சுட்டிக்காட்டினார்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கைமத்திய வகுப்பினரிடையே சமயம், கல்வி, அரசியல் போன்ற துறைகளில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இவ் விழிப்புணர்ச்சிக்கு அக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பௌத்த சமய நடவடிக்கைகளும், தேசியவாதமும் முக்கிய காரணங்களாக அமைந்தன.

சேர் பொன் இராமநாதன் முதன்முதல் யாழ்ப்பாணத்தில் சைவப் பெண்களுக்கென்று ஒரு ஆங்கிலக் கல்லூரியை நிறுவியவர். இக்கல்லூரியே 1913-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரியாகும். இவ் இராமநாதன் கல்லூரி ஏற்பட்டதோடு யாழ்ப்பாணப்பகுதி சைவப் பெண்களின் கல்வியைப் பொறுத்து ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டது. இக்கல்லூரி யாழ்ப்பாணப் பகுதியில் வாழ்ந்த மத்திய வகுப்புப் பெண்களிடையே கல்விகற்கும் ஆர்வத்தை தூண்ட வழிவகுத்தது. இதன் காரணமாக இக்கல்லூரியில் அதிகமான பெண்கள் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினர்.

இதனைவிட ஆசிரியர் ரீ. நாகமுத்து அவர்கள் 1913ம் ஆண்டில் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வடக்கு வீதியில் வைத்தீஸ்வர வித்தியாலயம் என்னும் ஆங்கிலப்பாடசாலையை ஆரம்பித்தனர். 1918ம் ஆண்டில இதனை இராமகிருஷ்ண சங்கத்திடம் ஒப்படைத்தார்.

1918-ம் ஆண்டில் வெளிவந்த ''யாழ்ப்பாண வைபவ கௌமுதி'' என்னும் நூலில் அக்காலத்து ஆங்கிலக் கல்வி நிலைபற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது!

''முற்காலத்திலும்இக்காலத்திலும் யாழ்ப்பாணம் கல்வியில் அதிக விருத்தியடைந்திருக்கிறது. இக்காலத்திலே உயர்தர ஆங்கிலக் கல்வியைக் கற்பிக்கும் பதினொரு கல்லூரிகள் யாழ்ப்பாணத்திலுண்டு. இவற்றுள் யாழ்ப்பாணக் கல்லூரி, மத்திய கல்லூரி, கில்னர் கல்லூரி. ஹாட்லிக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்ட். மிஷன் கல்லூரி என்னும் ஆறு கல்லூரிகளும் புரட்டஸ்தாந்த மிஷனரிமாராலும், சென்பற்றிக்ஸ் கல்லூரி றோமன் கத்தோலிக்க மிஷனாலும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, விக்ரோறியாக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்னும் நான்கும் இந்துக்களாலும் நடாத்தப்படுகின்றன. மேலே கூறப்பட்ட இராமநாதன் கல்லூரி, சென் மிஷன் பெண்கள் கல்லூரி, உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலை, உடுப்பிட்டி விடுதிப் பெண்கள் பாடசாலை, வேம்படி விடுதிப் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை விடுதிப் பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம் கன்னியஸ்திரி மடம் முதலி பாடசாலைகளும் மத்திய வகுப்புப் பெண்களின் உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வளர்த்து வந்த விசேஷ ஸ்தாபனங்களாய் விளங்கின. இத்தகைய கல்லூரிகளையும், பெண்கள் விடுதிப் பாடசாலைகளையும் இலங்கையின் வேறு பகுதிகளில் காண்பதரிதாம்.''

இவ்வாறு பெருந்தொகையான பாடசாலைகள் 20-ம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிறுவப்பட்டமையால் அங்கு வாழ்ந்த ஆண்களும் பெண்களும் இக்கல்லூரிகளில் உயர்கல்வி கற்று வெளியேறி அரசாங்கத்தில் உயர் பதவிகளில் அமரும் வாய்ப்பைப் பெற்றனர். இக்கல்லூரிகளின் மூலம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உயர்க்கல்வி கற்ற மத்திய வகுப்பொன்று உருவாகி, அவ்வகுப்பினர் சமுதாயத்திலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தனர். இவ்வாறு பெற்ற உயர் கல்வியைக்கொண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்த மத்திய வகுப்பினர் இலங்கையில் பட்டுமல்லாது மலாயாவிலும் உத்தியோகங்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

இக்கல்லூரிகளிலிருந்து பெற்ற சொற்ப ஆங்கில அறிவோடு யாழ்ப்பாணத் தமிழர்கள் மலாயாவில் உயர்பதவிகளைப் பெறக்கூடியதாகவிருந்தமையினால் பலர் அங்கு சென்றனர். இவர்கள் அங்கு உயர் பதவிகளை வகித்ததின்மூலம் கிடைத்த சம்பளத்தில் ஒரு பகுதியை இலங்கைக்கு அனுப்பியமை மத்திய வகுப்பின் வளர்ச்சிக்கு மேலும் உதவியது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். முன்பு மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து பணம் அனுப்பபட்டமை மத்திய வகுப்பின் வளர்ச்சியை மேலும் துரிதப் படுத்துவனவாக அமைந்தன. அதேபோல் இன்று மலாயா, சிங்கப்பூரை விட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் வேறு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேற்கத்தைய நாடுகளிலிருந்தும்பணம்அனுப்பப்படுவதும் இலங்கையிலிருந்து பலர் மேற்கூறப்பட்ட நாடுகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுச்செல்வதும் மத்திய வகுப்பின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் மேலும் உறுதுணையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க பிறிதொரு அம்சமாகும்.

1918-ம்ஆண்டின்பின்பழைய கல்லூரிகள் விருத்தியடைந்தும், பல புதிய கல்லூரிகள் தோன்றியும் ஆங்கிலக்கல்வியை மேலும் விருத்தியடையச்செய்து அதன்மூலம் மத்தியவகுப்பின் செல்வாக்கை கல்வித்துறை பொறுத்து மேலும் அபிவிருத்தியடையச் செய்தன.

பெண்ணடிமையை நீக்கி, பெண்களின் கல்வித்தரத்தையும், அரசியலறிவையும் வளர்க்க எடுத்த முயற்சியின் முக்கிய படிகளில் ஒன்றாகப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டமை அமைந்தது. சொத்து. கல்வித் தகுதிகளிடையில் வாக்குரிமை பெறத் தகுதி பெற்றிருந்த மத்திய வகுப்புப் பெண்கள் தங்களின் எழுச்சிக்காக சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதனை ஆதரித்தனர்.

டோனமூர் ஆணைக்குழு இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமெனப் பிரித்தானிய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்தமை மத்திய வகுப்பின் வளர்சசிக்கு ஊக்கமளிப்பதாக அமைந்தது.

டொனமூர் அரசியலமைப்பின் மூலம் மத்தியவகுப்பினருக்குப் பல சலுகைகள் வழங்

(9-ம் பக்கம் பார்க்க)

**தி. வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)**

---

## இலக்கியம்

எங்கே பெண்களுக்கு மதிப்புக் கொடுக்கப் படுவதில்லையோ, எதிர் காலத்தில் நம்பிக்கை இருப்பதில்லையோ, ஜனங்களுக்காகச் செய்யவேண்டியகடமைகள் உணரப்படுவதில்லையோ அங்கே உண்மையான தேசிய இலக்கியங்கள் இருக்க மாட்டா.

-மாஜினி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# "பொறுத்தது போதும்"

திருநெல்வேலி நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து மேடையேற்றிய "பொறுத்தது போதும்" நாடகத்தை, யோன்-டி-சில்வா அரங்கில் தேசிய நாடக விழாவில் பார்க்கும் வாய்ப்பை பெற்றேன். "அடிமை நிலையில் அல்லல் உறும் மீனவத் தொழிலாள வர்க்கத்தின், விடுதலை வேட்கையை எடுத்துக் காட்டும் ஒரு விழிப்புணர்ச்சி கொண்ட சமூக அமைப்பையும், மனித வர்க்கத்தின் உதிரத்தை மறைமுகமாக உறிஞ்சும் முதலாளி வர்க்கத்தின் தான் தோன்றித்தனமான அமைப்பையும் மோதவிட்டு வார்த்திருக்கும் வார்ப்புத்தான் "பொறுத்தது போதும்" நாடகம். இது சமூக அமைப்பில் விழிப்புணர்ச்சியைத் தூண்டியதுமல்லாமல், நல்ல கலை நடையோடு மேடையை கவர்ந்திருப்பது போற்றற்குரிய செயலே. இதில் இயக்குநர் அ. தாசீசியஸ் எவ்வளவு முயற்சி எடுத்துள்ளார் என்பது ஒவ்வொரு நடிகரின் அசைவிலும் வார்த்தையிலும் காணக்கூடியதாகவுள்ளது. அதே நேரத்தில் படைக்கப்பட்ட பாத்திரம் ஒவ்வொன்றிலும் தன்னிலை மாறாமல் சித்தரித்துக் காட்டியது இயக்குநரின் முயற்சியென மறைமுகமாக எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

எம். கண்ணனின் இசை மிகவும் நாடகத்தை தட்டிக்கொடுத்துள்ளது. பாத்திரங்களின் நடைக்கும் ஆட்டத்திற்கும், பாடலுக்கும் பார்ப்போரையும் சேர்ந்து ஆட்டிப் படைக்கும் இசையமைப்பை அவர் செய்துள்ளார் என்றே கூறவேண்டும்.

ஒளி அமைப்பு தத்ரூபமாக இருந்தது. அடிக்கடி திரையை மூடாவண்ணம், ஒளி மாற்றத்தால் செய்தது குறிப்பாக இரசிகரை அலுப்புத் தட்டாமல் இரசனைக்குள்ளாக்கியது நன்று.

பாத்திரங்களை நோக்குமிடத்து சம்மாட்டியாராக வரும் எஸ். பிரான்சீஸ் ஜெனம், முதலாளித்துவ மிடுக்கும், நடையும், அவரது பார்ட்டிலும், செயலிலும், சித்தரித்துக் காட்டும் நக்கல் தனங்களும்-அல்லல்படும் தொழிலாளரின் மேல் காட்டும் அவரது செய்கையும் இரசிகர்கள் வியக்கும்படியாக உள்ளது

விழிப்புணர்ச்சி கொண்ட வாலிபனாக வரும் தேவராசா ஆரம்பமுதல் இறுதிவரை தனது பாத்திரத்தை நன்றாகச் செய்துள்ளார் என்றே கூறலாம். உள்ளக்குமுறலை முகபாவத்தாலும், வார்த்தைகளாலும், சித்தரித்ததோடல்லாமல், சக மீனவத் தொழிலாளரையும் தன் பசமிழுக்க அவர் கொண்ட முயற்சிகடைசிவரை வெற்றி பெறும் என்ற தன்னம்பிக்கையை ரசிகர்களிடையே வெளிப்படுத்தியுள்ளது.

நசுக்கப்படும் தொழிலாள வர்க்கத்தில் இருந்து சிறு சலுகையுடன், சம்மாட்டியாரிடம் நேரடியாகக் கடமை புரியும் மன்ருடியாராக வரும் க. நவரத்தினம் அனுதாபம் ஒருபுறம் - கடமை ஒருபுறம் - தன்னை சம்மாட்டியிடத்திலும் தொழிலாள நண்பர்கள் இடத்திலும் இருந்து காப்பாற்றும் நிலை ஒரு புறம்-ஆக மூன்று கோணத்தில் நின்று நடித்த நடிப்பு பலே ஜோர் சம்மாட்டியை தன் மீது தாங்கிய பின் நிமிர்ந்து தன் நாரியைப் பிடிக்கும் பாவனை வரவேற்கத்தக்கது மல்லாமல் சம்மாட்டியின் அநியாயத்தை தன்மூலம் வெளிப்படுத்திக் காட்டும் சித்தரிப்பும் நன்று.

கிழவனாக வரும் ஏ. ரி. பொன்னுத்துரை, பாத்திரத்திற்குத் தக்கமாதிரி சம்மாட்டிக்குப் பயந்தும், சுந்தரத்துக்கு அனுதாபமாகவும், ஏனையோரிடம் தன் வயதைக் காட்டி நடிப்பதும் மிக நன்று. இருந்தும் ஈற்றில் எல்லோரும் ஒன்று சேரும் போது, அவர் தடுமாறுவதும் சற்று பாத்திரத்துக்கு அப்பால் போவதுபோல் தெரிகிறது. இது கவனிக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் அணியில் நின்று அசைவதும், குனிவதும், நிமிர்வதும், குரல் கொடுப்பதும் மேடையை நன்கு சித்தரிக்கிறது.

மொத்தத்தில் "பொறுத்தது போதும்" நாடகத்தின் வெற்றி, நடிப்புப் பயிற்சி நெறியின் வெற்றி என்று கூறுவது முற்றிலும் பொருத்தமானது.

- க. நவகுமார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

# செயல் முறைகளும் தொழிற்பாடுகளும்

துரை எங்கரசு பி. ஏ. (சிறப்பு)

பொருளாதார அபிவிருத்திச் செயல்முறையில் பொதுமக்கள் நேரடியாகப் பங்குகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும்முகமாகவே பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இச் செயற்பாடானது 1974-ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டுவருகிறது. இவ்வொழுங்கமைப்பானது முன்னைய சால வரவுசெலவுத் திட்டத்தினின்றும் சிறிது வேறுபட்ட ஒழுங்கில் வரவுசெலவுத்திட்டத்தின் மூலதனத்தில் ஒரு பகுதியைப் பன்முகப்படுத்தும் தனிச் சிறப்பை அவதானிக்கலாம். தேவையான நிதியைப்பெற திணைக்களங்கள், அமைச்சர்கள், திறைசேரி போன்றவற்றினூடே அனுமதி கோரும் கடினமான முறைகளைத் தவிர்த்து மாவட்டமட்டத்தில் தேவைப்படும் பணத்தைப் பெற அரசியல் அதிகாரசபைகளை அமைத்தலுக்கான ஆதாரமாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளது.

அரசாங்கம் வருடாவருடம் தயாரிக்கின்ற வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு பகுதிப்பணம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்காகஒதுக்கப்படுகின்றது. இவ்வொதுக்கீட்டுப்பணம் யாவும் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் பங்கீடு செய்யப்படும். ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்பது அந்தந்தமாவட்ட நிலப்பரப்பு, சனத்தொகை, அபிவிருத்தியடைந்த- அபிவிருத்தியடைய வேண்டிய அளவு என்ற காரணிகளைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். உதாரணமாக 1976-ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 327,000,000 ரூபாவில் (327 மில்லியன்) 17% கொழும்பு மாவட்டத்துக்கும், 9% கண்டி மாவட்டத்துக்கும் 7% குருநாகல் மாவட்டத்துக்கும்தலா5% ஈனவைமுறையே யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி, அநுராதபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மிகக் கூடுதலான ஒதுக்கீடு கொழும்பு மாவட்டத்திற்கு (5 கோடியே 40 லட்சம் ரூபா) கிடைத்தது. மிகக் குறைந்த தொகை வவனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு (தலா 30 லட்சம்) ஒதுக்கப்பட்டது. இவை மொத்த ஒதுக்கீட்டுத்தொகையில் ஒரு சதவீதத்துக்கும் குறைவானதாகும். இதன் மூலம் ஒதுக்கீடுகள் பல்வேறுபட்டனவாய் அமைந்துள்ளமையையும் இங்கு புவியியற் காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதையும் நன்கு விளங்கிக்கொள்ளலாம். ஆனால் இன்று எல்லாத் தொகுதிகட்கும் ஒதுக்கீடுகள் சமஅளவினதாக அமைவதைக் காணலாம்.

ஒவ்வொரு தேர்தற்தொகுதி மட்டத்திலும் அபிவிருத்தித் தேவைகள் பல்வேறுபட்டனவாக அமைந்திருக்கும். இத்தேவைகளுள் எவை, எவை அத்தியாவசியமானவை என்பதை அந்தந்த தேர்தல்தொகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளுடனும் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் மூலமும் அறிந்து அதனை ஒரு பட்டியலாகத் தயாரித்துமாவட்ட அமைச்சுக்கு அனுப்பிவைப்பார்கள். மாவட்ட அமைச்சுடன் மக்கள் குழுக்கள், சமூக சேவை நிலையங்கள் போன்றனவும், பாராளுமன்ற உறுப்பினர்களும் நேரடியாகத் தொடர்புகொண்டு, தமது கோரிக்கைகளைப் பரிசீலிக்கும்படி சேட்டுக்கொள்ளலாம்.

இவர்களது கோரிக்கைகள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பன நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்துப் பாதைகள் அமைத்தல், விவசாயம், விவசாய உற்பத்தி நிலையங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், கிராமிய வைத்திய சாலைகள், மருந்துச்சாலைகள், உதவி அரசாங்க அதிபர், பகுதி அரசிறை அலுவலர்களுக்கான அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வனபற்றியே அமைந்திருக்கும். இவ்வாறு ஒவ்வொரு தேர்தல் தொகுதி மூலமும் மாவட்ட அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பட்டியல்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதிகளுக்குமென பணம் எவ்வாறு செலவுசெய்யப்படும் என்பது மாவட்ட அமைச்சினால் தீர்மானிக்கப்படும். இது திட்ட அமுலாக்கல் அமைச்சின் அனுமதியுடன் அமுல் நடத்தப்படும். இவற்றுள் கிராமியப் பகுதிகளில் வீதிகள் அமைத்தல், மின்சாரஇணைப்பு, நீர்ப்பாசனம், பாடசாலைக்கானகட்டிடங்கள் அமைத்தல் என்பனவே முதன்மைபெற்றனவாக இருப்பதை கடந்தகாலச் செயற்பாடுகளிலிருந்து நன்கு அவதானிக்கலாம். செலவுகள் எவ்வாறு அமைந்துள்ளபோதிலும் இதற்கான கணக்குகளை அம் மாவட்ட அரசாங்க அதிபர் வைத்திருப்பார்.

1979 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட . வரவு-செலவுத்திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கென 22,000,000 ரூபா (22 மில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்தலா 2,000,000 ரூபா (2 மில்லியன்) வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்படுகின்ற பணம் அந்த நிதியாண்டிற்குள் செலவழிக்கப்படும். இல்லாத பட்சத்தில் அவை மீளப்படும். 1979-ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் மீளப்பெறப்பட்டவை 1980-ம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளுடன் 1979-ம் ஆண்டுகளின் தொடர்ச்சி வேலைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒதுக்கீட்டுத் தொகைகள் ஒரு வருட காலத்துள் செலவு செய்யப்படல்வேண்டும். இல்லாத பட்சத்தில் மேலும் ஓராண்டு வழங்கப்படும். எவ்வாறாயினும் இரண்டு வருடத்துள் ஒதுக்கீட்டுப்பணம் செலவுசெய்தல் அவசியமாகும். சில சமயங்களில் ஒதுக்கீட்டுப்பணம் திட்டமிடப்பட்ட அபிவிருத்திக்குப் போதாதனவாகவும் அமையலாம். அந்நிலைமையில் மேலும் ஒதுக்கப்படுவதை நோக்கலாம். குறிப்பாக 1979-ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மேலதிகமாக 159,000,000 ரூபா (15.9 மில்லியன்) ஒதுக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

1980-ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் தலா 25,000,000 ரூபாவாக (2.5 மில்லியன்) அமையும் பட்சத்தில் மொத்தம் 275,000,000 ரூபா (27.5 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைச் செலவு செய்வதற்கான திட்டங்களும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி அமைந்துள்ள முக்கிய ஒதுக்கீடுகளுடன் விவசாயம், தபால், தொலைத் தொடர்புகள், சிறுகைத் தொழில், நெசவு போன்றவற்றுக்கும் பெருந்தொகைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் கடந்த ஐந்து ஆண்டுகளாகவே (1974-1979) அமுலிலிருந்து வருவதால் இதன் தாக்கம் குறித்துச் சரியான மதிப்பீட்டினைச் செய்யமுடியாதுள்ளது. எனினும் இச் செயற்பாட்டிற்கும் பொறுப்பானவர்களின் திறமையைப் பொறுத்து மாவட்டத்திற்கு மாவட்டம் வெவ்வேறு அளவினதாய் சமவிகிதாசாரமற்று அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எவ்வாறாயினும் இம்முறையினால் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகள் பெருமளவு துரிதப்படுத்தப்பட்டன எனக்கூறலாம். குறிப்பாக நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து, பிராந்திய நிருவாகம் போன்ற துறைகளிலான சில மூலதனப் பணிகள் துரிதமாகச் செயற்பட்டதனை அவதானிக்கலாம்.

இதுவரை காலமும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழமைந்து செலவினங்கள் கைத்தொழில் நடவடிக்கைகளில் பெரிதும் கவனம் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும். எனவே கைத்தொழில் முயற்சியில் கூடிய கவனம் செலுத்தப்படின் அவை பெரிதும் மக்களால் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தினை தொகுத்து நோக்குகின்றபோது இது இலகுவாகவும், விரைவாகவும், பணத்தைப் பெற்றுச் சிறிய திட்டங்களைக் காலக்கிரமத்தில் நிறைவேற்ற பெரிதும் உதவியாக அமைகிறது எனலாம். அத்துடன் மக்கள் நாட்டின் அபிவிருத்தி குறித்து நேரடியாகப் பங்குபற்றவும் வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொரு பிரதேசத்தின் தேவைக்கான திட்டமிடல் பொறுப்பையும் அதனை நிறைவேற்றும் பொறுப்பையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அப்பகுதி மக்களே பொறுப்பேற்கின்றனர் எனலாம்.

## காரணம் என்னடி?

வட்டக் கரு விழிகள்
வந்து மோதுவதேன்
கட்டுக்கடங்காமல்
கண்கள் பாய்வதுமேன்
மொட்டு மலராகி
முகமும் மலர்வதுமேன்
பட்டுச் சிறு கன்னம்
பழமாய்சிவப்பதுமேன்?

சுட்டு விரலாலே
சேலை முறுக்குவதேன்
மெட்டுப் பாடல்கள்
மெல்ல முனகுவதேன்
வட்டக் குருத்தாக
வந்த நெடும் கழுத்து
எட்டிப் பார்ப்பது மேன்
என்னைத் தேடுவதேன்?

கிட்ட நானின்றால்
கீழே பார்ப்பது மேன்
எட்டி நான் போனால்
என்னைப்பார்ப்பதுமேன்
கட்டுக் கடங்காமல்
கயல்கள் துள்ளுவதேன்
குட்டு வெளிப்பட்டால்
குனிந்தே சிரிப்பது
மேன்?

சொட்டும் பாராமல்
செருக்காய் நானின்றால்
விட்டுக் கொடுக்காமல்
வீம்பாய் நிற்பது மேன்
விட்டுக் கொடுக்காமல்
வீம்பாய் நானின்றால்
பட்டுக் கண்ணிரண்டும்
பலமாய்கலங்குவதேன்?

-வடகோவை
வரதராஜன்

## தமிழ்ப்பிரியா கறுப்பா?

இளைய தலைமுறையின் இலக்கியச் சந்திப்பில் தமிழ்ப்பிரியாவை கறுப்பென்று காவலூர் ஜெகநாதன் குறிப்பிட்டிருப்பதைப் படித்ததும் எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. தமிழ்ப்பிரியாவை கறுப்பென்று குறிப்பிடும் ஜெகநாதனின் கண்களில் ஏதோ கோளாறுபோல்தோன்றுகின்றது. தமிழ்ப்பிரியாவுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைக்காது விட்டாலும்- பலமுறை அவரைப் பார்த்திருக்கிறேன். வெள்ளைக்கன்னங்கள் இரண்டிலும் குழிவிழ அமைதியாக அவர் சிரிக்கின்ற அழகைப் பலதடவை ரசித்திருக்கின்றேன். பொது நிறம் என்று ஜெகநாதன் குறிப்பிட்டிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் அவர் கறுப்பு அல்ல?

எஸ். திலகராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலரின் கல்விப்பணி

(தென்மட்டுவில் இந்துமன்றம் நடத்திய நாவலர் நூற்றுண்டுவிழா - கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை)

"கல்வியில்லாதவன் கண்ணில்லாதவன்" என்னும் முதுமொழிக்கிணங்க, தமிழ் இனத்திடையே கல்வியில் சிறப்புற்று, புகழ்பெற்று விளங்கியவர்களுள் சிறந்தவர் 1822-ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து நல்லூரில் தோன்றிய ஆறுமுகநாவலரவர்கள். கல்வி வளர்ச்சிக்கும், சைவசமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஆறுமுகநாவலர் ஆற்றிய தொண்டு அளப்பரிது. கல்வியைப் பற்றி நாவலர் சொன்னவற்றை முதலில் நினைவு கூருவது சாலவும் பொருத்தமானது.

"மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப் பொருள் என இரண்டாகும். கல்வியானது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும், வித்தையெனினும் பொருந்தும். உயர் குலமும், அழகும், செல்வமும் உடையவராயினும் கல்வியில்லாதவர் முருக்கம் பூவிற்குச் சமமாவர். கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். கல்வியை கற்குந்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினுல் கல்வியை சிறிது கற்ற மாத்திரத்தில் அமையாது மேலும் மேலும் கற்றல் வேண்டும்."

சிறீலசிறீ எனப்படும் சிறப்பு மிகு பட்டம் பெற்றுத் தமிழ் உலகிற்குப் புகழ் சேர்த்தவர் ஆறுமுகநாவலரவர்கள். சைவவினுவிடை, பாலபாடம் போன்ற பாடசாலைப் புத்தகங்களில் அவர் எழுதிய சிறு பாடங்களும், சிறு வாக்கியங்களும் ஆச்சரியப்படத்தக்கவை. மாணவருக்கு ஒழுக்கத்தையும் அறிவையும் ஒழுங்கே போதிப்பவை. கற்றோரையும் மற்றோரையும் சிந்திக்கத் தூண்டுவன. பாலபாடம் முதற்புத்தகத்தில் சில வரிகளைப் பாருங்கள்.

"பள்ளிக்கூடத்திலே கல்வியில் மாத்திரம் உன் கருத்தை இறக்கு."

"பள்ளிக்கூடச் சுவரிலாவது தூணிலாவது சார்ந்து அதை அழுக்குப்படுத்தாதே"

"நிமிர்ந்து நின்று புத்தகத்தை மார்புக்கு நேராகப் பிடித்துக்கொண்டு வாசி"

"விரைவாக வாசியாதே; மெல்லென வாசி."

"எல்லாருக்கும்கேட்கும்படி உச்சமாக வாசி."

"பிழையில்லாமல் ஒவ்வொரு சொல்லையும் தெளிவு பெற உச்சரி."

"பிழையில்லாமல் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் கேட்டு அறிந்து கொள்."

"உபாத்தியாயர் உன் பாடத்தை விளக்கும்பொழுது அவதானத்துடன் கேளு."

"பிழையில்லாமலே பேசப் பழகு."

"ஓலையிலும் காகிதத்திலும் பிழையில்லாமல் நன்றாக எழுதப் பழகிக்கொள்ளு."

"நித்தமும் இரவிலே விளக்கு ஏற்றுவித்து வைத்துக் கொண்டு படி."

"வெயர்வை ஒழுகும்படி நித்தமும் சிறிதுநேரம் விளையாடு."

"படிக்கிற நேரத்தில் விளையாடாதே."

எப்படி இருக்கின்றன நாவலரின் வசனங்கள்!

ஐம்பது பக்கங்கள் கொண்ட பாலபாடம் முதற்புத்தகத்திலே இப்படியான அரிய அறிவுரைகள், அழகிய சொற்கள் நிறைய உள்ளன. ஒரு புத்தகமே இவ்வளவு கல்விப் பணியை ஆற்றுகின்றதென்றால், அவர் எழுதிய சிறிய பெரிய நூல்கள் எல்லாம் எவ்வளவு ஆழமான கருத்துக்களையும் அறிவைத் தரும் அதிசய வாக்கியங்களையும் கொண்டிருக்கும் என்று சிந்திக்கும் பொழுது பெருமகிழ்ச்சி பிறக்கிறது.

இலக்கியத்தில்அவர் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார். பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலியவற்றை அச்சிடுவித்து கற்போர்க்கு உதவினுர். இலக்கணத்தில் அவர் வித்துவானுக விளங்கினுர். நன்னூற்காண்டிகை, சேனுவரையம்பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து முதலியவற்றை அச்சிடுவித்து வெளியிட்டார். சைவ சமயத் தொண்டு அவர் உயிர். பெரிய புராணவுரை, தருக்க சங்கிருதம். சைவசமய நெறியுரை முதலிய பல நூல்களை நாவலர் வெளியிட்டார். வசன நடைக்கு நாவலரல்லால் வேறு யார் என்று பேர்பெற்ருர். திருவிளையாடற்புராணவசனம் பெரிய புராணவசனம் முதலிய நாவலரின் வசனநடைச்சிறப்புக்கு சான்றுபகர்வன. செய்யுள் இயற்றுவதில் அவர் வல்லவர்என்பதற்கு அராலி சித்தி விநாயகர் விருத்தம் ஓர் எடுத்துக்காட்டு. வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் பிறவும் கல்விப்பணிக்கு நாவலர்செய்த சிறப்பான தொண்டினை உணர்த்தும்.

நாவலர் அவர்களின் சிறு சிறு புத்தகங்களில் எவ்வளவு பெரிய போதனைகள். அவருடைய வசனங்களும், நியுரைகளும் அரும் பெரும் பொக்கிஷங்கள். இவை எல்லாம் கற்றதனுலன்ருே, அந்நாளில் யாழ்ப்பாணத்தில் பண்டிதர்களும், புலவர்களும், சான்ருேர்களும் வாழ்ந்தார்கள்.

நாவலரின் கல்வியறிவிற்கும் கல்விப்பணிக்கும் இந்தியாவில் பெருமதிப்பு இருந்தது. ஈசானசிவாசாரியார் ஒரு கூட்டத்தில் பேசுகையில், நாவலரின் முதலாம் பாலபாடத்தை கையில் வைத்துக்கொண்டு பார்த்துப்பார்த்து பேசினுராம். கூட்டமுடிவில் தலைமை வகித்த இந்திய சுதந்திர விடுதலைப்போர் வீரரில் ஒருவரான மாளவியா, அது என்ன புத்தகம் என்று கேட்டார். இது யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்த ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயா அவர்களால் எழுதிய முதலாம் பாலபாடம் என்ருர் சிவாச்சாரியார். தமிழ் தெரியாத மாளவியா அப்புத்தகத்தை வாங்கிப் 'புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு' முதலாம் வகுப்பு நூலே இப்படி என்ருல் அந்த மகான் எழுதிய பெரிய புத்தகங்கள் எப்படி இருக்கும்?' என்று கேட்டாராம். காசி இந்துப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர் மாளவியா. அத்தகைய கல்விமான்களால் மதிக்கப்பட்டவர் எங்கள் நாவலர் பெருமான்.

'சைவப் பயிரை வளர்க்க வந்த சொல்லாறு' என்றும் 'இலக்கண இலக்கிய வரம்பு கண்டவர்' என்றும், 'வசன நடை கைவந்த வல்லாளன்' என்றும், 'அவருடைய பாலபாடங்களைவிட நயமான புத்தகங்கள் இளைஞர்களுக்கு இல்லை' என்றும், 'நல்லவர் போற்றும் நல்லூர் நாவலர்' என்றும் தமிழ்நாட்டுப் புலவர்களாலும், வித்துவான்களாலும், அரசர்களாலும் பாராட்டப்பெற்றவர் நாவலரவர்கள்.

இவர் பிரசங்கம் செய்யும் முறையைக் கேட்டு மனமுருகிய திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்கள் முன்னர் எவருக்கும் அளிக்கப்படாத 'நாவலர்' எனும் பட்டத்தை இவருக்கு வழங்கி மதிப்பளித்தார்கள்.

தமிழ் உலகும், கல்வியும், சைவமும் உள்ளளவும் நாவலர் நாமம் நின்று மகிழும் என்பதுறுதி.

**செல்வன் கி. மதியழகன்**
(மட்டுவில் மகாவித்தியாலயம்)

# பூரண சூரிய கிரகணம்

நேற்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சூரிய கிரகணத்தைப் பார்க்கவேண்டாம் என்றும் இக்கிரகணத்தின்போது வெளியாகும் வெப்பக் கதிர்கள் கண்ணைப் பாதிக்கும் என்றும் இந்திய நிபுணர்கள் எச்சரித்திருந்தனர்.

குறிப்பாக குழந்தைகளை விளையாட்டாகவேனும் பார்க்க அனுமதிக்கவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கிரகணம் எவ்வாறு நிகழ்கின்றது என்பதைப் பார்ப்போம்.

சூரியன்-சந்திரன்-பூமி ஆகியன ஒரே நேர் கோட்டில்- பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்போதே சூரியகிரகணம் ஏற்படுகிறது.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வரும்போது சூரிய ஒளி சந்திரனில் பட்டு அதன் மூலம் ஏற்படும் நிழல் பூமியில் விழுகிறது. சந்திரனுடைய நிழல் சிறிதாகையால் அது பூமியின் ஒரு சிறு பகுதியையே மறைக்கிறது.

சந்திரனின் நிழல் பூமியில் விழும் இடங்களில் சூரியன் பூரணமாக மறைக்கப்படுவதால் அப்பகுதியிலேயே பூரண சூரியகிரகணம் ஏற்படுகிறது.

**ப. சத்தியேந்திரன்,**
பகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை.

## யுத்தம் நியாயமாவது எப்போது?

மரணம் எப்படி புனிதமானதோ அப்படியே யுத்தமும் புனிதமானது. ஆனுல் மரணமானது எப்படி புனிதமான ஒரு வாழ்க்கையின் நுழைவாயிலைத் திறந்துவிடுகிறதோ அப்படியே யுத்தமும் புனிதமான ஒரு லட்சியத்தையுடையதாயிருக்க வேண்டும்.

-மாஜினி

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

# கொரில்லா அரக்கன்

## அத்தியாயம்-20

வேலன் பின்னர் தனது கனவில் காவல் தேவதை கூறியதுபோல் பேய் வீழ்ச்சியின் நீரை எடுப்பதற்காக அங்கிருந்து புறப்பட்டு மாய வீழ்ச்சியை நோக்கிச் செல்லலானுன்.

பேய் வீழ்ச்சியை அடைந்த வேலன் அவ்வீழ்ச்சியை நிமிர்ந்து நோக்கினுன். அங்கு மூன்று நீர் வீழ்ச்சிகள் இருப்பதாகத் தெரியவில்லை! 'கண்ணுக்கு எட்டாத உயரத்திலேயே அவை ஒன்றுசேர்ந்து வருகின்றதுபோல் தெரிகின்றதே. எவ்வாறு அவ்வுயரத்தை அடைந்து தேவதை கூறியபடி மத்தியிலுள்ள வீழ்ச்சியின் நீரைப் பெறுவது?... என எண்ணிய வேலனின் சித்தனையைக் கலைத்தது ஒரு குரல்.

**வி. சந்திரகுமார்**

'வேலனே! உதவி தேவையானுல் தயங்காமல் கூறு?'

திடுக்குற்றுத் திரும்பிய வேலன் அங்கே முன்னர் பாலைவனத்தில் தக்கசமயத்தில் உதவிபுரிவதாகக் கூறிய இராட்சதக்கழுகு நின்று கொண்டிருந்தது.

வேலனுக்கு ஒரே மகிழ்ச்சி; 'கழுகு நண்பரே இப்பேய் வீழ்ச்சி ஆரம்பிக்கும் இடத்தில் மூன்று வீழ்ச்சிகள் தோன்றுகின்றன. அதில் மத்தியிலுள்ள வீழ்ச்சியின் நீரை பெறவேண்டியுள்ளது! இதைப் பெற எனக்கு உதவிபுரிவாயா' வேலன் வினவினுன்.

'தாராளமாக வேலா!' எனக் கூறியவாறு தனது உருவத்தைப் பல மடங்கு பெருப்பித்துக்கொண்டது கழுகு! வேலனும் உடனே அதன் கால் விரல் ஒன்றிலே ஏறி அமர்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்!

அடுத்தகணம் மின்னலென வீதியில் கிளம்பியது கழுகு!

சிறிது நேரத்தில் கழுகின் உதவியால் பேய்வீழ்ச்சியின் ஆரம்ப இடத்தை அடைந்தான் வேலன்! நீர்வீழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமுடையதாகக் காணப்பட்டது! வேலன் அதன் மத்தியில் அமைந்திருந்த வீழ்ச்சி

(9-ம் பக்கம் பார்க்க)

## இலவசச் சிரிப்பு!

சதாசிவம்: 'எங்க வலு பிசியா ஓடித்திரியிறீர்...!'

கந்தரம்: மகனுக்கு இலவசக் கல்வி, இலவசப் புத்தகம் கிடைச்சுட்டுது. எங்கேயாவது இலவச 'டியூசன்' கிடைக்குமா எண்டு ஓடித்திரியிறேன்...!'

●

கந்தையா: என்ன அவர் லொறியில் புத்தகம் கொண்டு வந்து இறக்குகிருர்...ஏதும் புத்தகக் கடை திறக்கப் போகிருரா?'

முத்தையா: இல்லை அவருக்குப் பிள்ளைகள் அதிகம். அதுதான் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு கொடுத்த இலவச புத்தகங்களை' லொறி பிடிச்சு ஏற்றி வந்திருக்கிருர்!'

●

ஒருவர்: எஸ். எஸ். சி' பாஸ்பண்ணின எனது மகனை ஆசிரியரிடம் சொல்லி பெயிலாக்கிட்டேன்!

மற்றவர்: ஏன்...?

ஒருவர்: எச். எஸ். சி. போனுல் பிறகு இலவச புத்தகம் கிடைக்காதே.

### இவ்வாரச் சிறப்புச் சிரிப்பு

சோமர்: இலவசப் பாடப் புத்தகம் வந்தது தப்பாப் போச்சு...!

தம்பர்: ஏன்...?

சோமர்: ஒரு காலத்தில் என்ரை மகனிடம் உன்னை என்ரை காசிலை படிப்பிச்சனுன்' எண்டு சொல்ல முடியாதே...!

**செல்வன்**
**வி. சந்திரகுமார்.**
யாழ். மத்திய கல்லூரி.

## உங்கள் திருமுகம்

ஞாயிறுதோறும் மாணவரின் சிந்தனைகளை மிகவும் சிறப்புடன் தாங்கி வரும் "மாணவர் எண்ணம்" என்றபகுதி மாணவருக்கு மிகவும் பயனுள்ள ஓர் அம்சமாக அமைந்துள்ளது. நான் இதுவரை அவதானித்து வந்த எண்ணங்களிலே அண்மையில் வெளிவந்த மாணவன் முல்லைராஜின் "திருக்குறளில் இலக்கிய உணர்வும், இலக்கண அமைவும்" எனும் கட்டுரை மிகவும் சிறப்புடையதாகக் காணப்பட்டது. இப்புதிய ஆண்டில் புதியதைப் படைத்த முல்லைராஜுக்கு எனது பாராட்டுகள். இது போன்ற தரம்மிக்க அம்சங்களை 'ஈழநாடு' மேலும் பிரசுரிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

**ஜெ. ஜெனி**
(பா. யேர்வாலை கல்லூரி)

## எண்களின் விந்தை

15873 ஐ 7 இன் பெருக்கத்தால் பெருக்கும்போது உண்டாகும் விந்தை

$15873 \times 7 = 111111$
$15873 \times 14 = 222222$
$15873 \times 21 = 333333$
$15873 \times 28 = 444444$
$15873 \times 35 = 555555$
$15873 \times 42 = 666666$
$15873 \times 49 = 777777$
$15873 \times 56 = 888888$

இதேபோல் ஏழின் பெருக்கத்தால்பெருக்கினுலும் இதே போல் வந்துகொண்டிருக்கும்.

[illegible]ஸ்கந்தராசா
யாழ். [illegible]கல்லூரி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-E.V. சரோஜா
**வீரத்திருமகன்**
(புதிய பிரதி)

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - ஜெயலலிதா
நடித்த
**சூரியகாந்தி**
(புதிய பிரதி)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சௌகார்ஜானகி
**மகாகவி காளிதாஸ்**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
**தே வ தா ஸ்**
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

**REGAL** (Jaffna) Phone: 369
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m
For the first time in 42 years. One film Sweeps, all the Major Academy Awards.
WINNER OF 5 ACADEMY AWARDS
Best Picture
JACK NICHOLSON
**ONE FLEW OVER THE CUCKOO'S NEST**
Adults only Color

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
**2-nd Crowded Grizzly Week**
**"GRIZZLY"**
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
That "Walking Tall" man is back!
Joe Dow Baker is back As Rugged Hero
in
**FRAMED**
(Adults only)
Coming Soon: **BADGE 373**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
**ராமன்தேடியசீதை** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7698
**தெய்வ மகன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
முத்துராமன் - ஸ்ரீவித்யா - சுந்தரராஜன்
**காலங்களில் அவள் வசந்தம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - பத்மினி
**அரசிளங்குமரி**


## மத்திய....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்தும் அவர்கள் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சியைக் கைவிடவில்லை. சர்வஜன வாக்குரிமையின் மூலம் இறுதி அதிகாரம் மக்கள் கைகுக் வந்ததை அவர்கள் உணர்ந்திருந்தனர். பல்வேறு பகுதியினராகப் பிரிந்திருந்த மத்திய வகுப்பினரை புதிய பொருளாதார, சமூக சக்திகள் ஒருங்கிணைத்து, அவர்களிடையே ஒரு பொதுநோக்கை ஏற்படுத்தியது.

மத்திய வகுப்பினரிடையே காணப்பட்ட சுரண்டல் முறையும், இன உணர்ச்சிகளும் அவர்களிடையே 1943-ம் ஆண்டளவில் முரண்பாடுகள் ஏற்படக் காரணங்களாக அமைந்தன. இம்மத்திய வகுப்பினரின் இறுதிக் குறிக்கோள் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தையும், அதிகாரத்தையும் பெறுவதாக இருந்தது. இதன் நிமித்தம் இவர்கள் அரசாங்க சபைக்கு நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டனர்.

(தொடரும்)

## பாடசாலைப்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பற்றிக் கேள்விப்படவில்லை. இவர்கள் முரசுகளிலிருந்து சொற்ப அளவில் குருதிப் பெருக்கு ஏற்படுவது முரசுகள் அசாதாரணமான நிலையிலுள்ளதற்கு அறிகுறி எனக் கருதவில்லை.

மனிதர் மூப்படையும்போது பல்லை இழப்பது தவிர்க்கமுடியாதது என்றே பெரும்பான்மையான பிள்ளைகள் நினைத்தார்கள். பற்கள் சரிவரக் கவனிக்கப்பட்டால் வாழ்நாள் பூராவும் வைத்திருக்கப் படலாம் என்பதை ஒருவராவது அறிந்திருக்கவில்லை.

ஒரு பிள்ளை தெரிந்தெடுக்கும் ஆகாரவகையும் அதனை அருந்தும் முறையும் அவருடைய வாய் ஆரோக்கியத்தில் நல்ல அல்லது உபயோகமற்ற விளைவை ஏற்படுத்தலாம். அவர் உணவு வேளைகளுக்கிடையில் இடையிடையே பசைத்தன்மையானதும் வெல்லமுள்ளதுமான உணவுகளை உட்கொண்டால் அவரது வாயில் பற்குழிகள் ஏற்படுவதற்கு அப்பழக்கம் வழிகோலும். மறுதலையாக உணவுவேளைகளுக்கிடையில் இனிப்புப் பண்டங்களை அருந்துவதில்லை என்னும் கட்டுப்பாட்டுடன் இருந்தால் அப்பிள்ளை பற்சொத்தையால் தாக்கப்படுவது குறைக்கப்படும். இக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு பெற்றோர் ஆசிரியர் அல்லது பற்சிகிச்சையாளர் பிள்ளைக்குக் கற்பிக்க வேண்டும். ஒப்பான வழியில் பிள்ளை தனது பற்களை சுத்தமாக வைத்திருப்பதற்கு திறமையும் ஊக்கமும் உள்ளவராக இருக்கவேண்டும். இவ்வாறு பற்களில் உணவு தங்கியிருப்பது தடுக்கப்பட்டு பற்றீரியாவுக்குரிய பிளாக் தினமும் அகற்றப்படும். பிள்ளை இடையிடையே பல் வைத்தியரிடம் செல்வது, சிகிச்சை பெறுவது முதலியவற்றின் அனுகூலங்களை அறிந்திருக்கவேண்டும். அவற்றுடன் பிள்ளை தடுக்கும் அல்லது சீராக்கும் பற்சிகைக்கு உள்ளாவதற்கு பயப்படாத மனோநிலை உள்ளவராகஇருக்க வேண்டும். உணவு, வாய்ச் சுகாதாரம் முதலியவற்றைப் பற்றி பற்சிகிச்சையாளர் அளிக்கும் புத்திமதிகளை ஏற்கக் [illegible] வேண்டும்.

குடும்பத்தில் பிள்ளைக்குக் கிடைக்கும் பல்வேறுவகைப்பட்ட உணவுகள் பிள்ளையின் வாய் ஆரோக்கியத்தில் குறிப்பிடக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தலாம். வீட்டில் வெல்லம் கொண்ட உணவுகள் அடிக்கடி அளிக்கப்படாமலும் பிள்ளைகள் நினைத்த உணவை நினைத்தவேளையில் எல்லாம் உண்பதைப் பெற்றோர் தடுத்தல் அவர்கள்பிரச்னைகளுக்கு, பல்நோய்கள் தொடங்குவதற்கு மிகவும் முக்கியமான காரணியொன்றை அகற்றுவதற்கு உதவுகின்றனர்.

வாய் ஆரோக்கியத்திற்கு உதவுவதற்கும் பெற்றோர்பிள்ளைகளின் வாய் ஆரோக்கியத்தின்முக்கியத்துவத்தை நன்கு உணரவைக்கப்படவேண்டும்.

## மட்டு. நகர் இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு பிரதேசத்தின் ஒரே ஒரு கூட்டணி எம். பி. யான பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் மட்டக்களப்பில் இருந்தும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும், கல்குடா, பட்டிருப்பு தொகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்க தேர்தல்களில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திரு. செல்லையா இராசதுரைக்கு ஆதரவாக மட்டக்களப்பு ப. நோ. கூ. ச. தேர்தல்களில் போட்டியிடவில்லை என்றும் தெரிவித்து இளைஞர்கள் சரமாரியாக கேள்விஎழுப்பியதாகவும் தெரிகிறது.

### பட்டிருப்பு எம்.பி. கருத்து

தமக்கு முறைப்படி அழைப்பு அனுப்பப்படாத காரணத்தாலேயே தாம்அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம் தெரிவித்தார்.

### யோகேஸ் விளக்கம்

மட்டக்களப்பு பிரதேசத்தில் கூட்டணியைப் பலப்படுத்துவது தொடர்பான கூட்டங்களை நடாத்துவதற்கு திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தனும் தாமும் இம் மாதம் 19-ம் திகதி முதல் 21ம் திகதிவரை மட்டு நகருக்கு விஜயம்செய்வதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது என்று யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரன் கூறினர். (இ)

## நூல்கள்

நமது தேசிய மரபைத் தழுவியும் ஜனங்களுடைய வாழ்க்கையையொட்டியும் நமது நாட்டில் நூல்கள் எழுதப்படவேண்டும்.

-மாஜினி

## கொரில்லா.........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் செறிந்த நீரை ஒரு புட்டியில் நிரப்பிக்கொண்டதை அடுத்து கழுகு வேலனுடன் கீழே இறங்கியது.

'கழுகு நண்பரே தக்கசமயத்தில் வந்து உதவிபுரிகிறுயே! உனக்கு என் நன்றிகள். வேலன் அதற்கு விடைகொடுத்து வழியனுப்பிவைத்தான்.

'பின்னர் வேலன் காவல் தெய்வத்தின் கூற்றுப்படி மாய வீழ்ச்சி நீர்ப்புட்டியை கையில் ஏந்திக்கொண்டு காவேரி ஆற்றினுள் தலைகீழாகக் குதித்து நீரில் மூழ்கினன்!

நீருள் மூழ்கிய வேலன்,... இராட்சத உருக்கொண்ட பயங்கர முதலைகள் தம்மை ஒன்றும் செய்யாது தன்னருகே செல்வதைக் கண்டு வியந்தபடியே அங்கிருந்து வடக்குத் திசையை நோக்கி நீந்தி வடகரையை அடைந்தான்.

புட்டியிலிருந்த மாயவீழ்ச்சியின் செந்நீரைத் தனது இரு கண்களிலும் பூசிக்கொண்ட வேலனுக்கு மாயவீழ்ச்சிக்குக் கீழேயிருந்த மாயக்குகை தென்பட்டது!

உடனே வேலன் அதனுள் புகுந்தான். குகையில் ஒரே இருட்டாக இருந்தது. அத்துடன் ஆந்தையின் அலறலும் வேறு! ஆனல் வேலனே சற்றும் பயப்படாமல் துணிவுடன் அக்குகையின் மறுபக்கமுள்ள மாயவெளியை அடைந்தான்.

அங்கிருந்த மரங்களெல்லாம் காய்ந்து கருகி சூனியப்பிரதேசம் போல் காட்சியளிப்பதையும் அங்கு பண்டை ஓடுகளும் எலும்புக்கூடுகளும் நிறைந்திருப்பதையும் கண்டான். அத்துடன் அங்கு கொடிய நச்சு ஜந்துக்களும் மலைப்பாம்புகளும் நிறைந்திருந்தன.

மாயவெளியின் மத்தியில் எவராலும் ஏறமுடியாத செங்குத்தாக அமைந்த மிகவும் வயிரமான ஒரு கற்பாறையும், அதன் உச்சியில் ஒரு மாளிகையும் இருப்பதைக் கண்ட வேலன், அதுவே கொடிய கொரில்லா அரக்கன் வசிக்கும் மாளிகை என ஊகித்துக் கொண்டான்!

வேலனும் கொடிய விலங்குகள் எல்லாம்தாண்டி எவராலும் ஏறமுடியாத பாறையில் அமைந்திருக்கும் கொரில்லா அரக்கனின் மாளிகையை எவ்வாறுஅடையலாம் என யோசித்தவண்ணம் தனது கைகளைப் பிசைந்துகொண்டிருந் தான்.

அப்பொழுது...

வானில் திடீரென ஒரு புஷ்பவிமானம் தோன்றி வேலனுக்கு அருகே வந்திறங்கியது. (வளரும்)

## இறந்தவர்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கிய திடீர் மரண விசாரணை அதிகாரி தொடர்ந்தும் இம்மணங்கள் சம்பந்தமாகப் பொலிசாரை விசாரணை செயயுமாறு உத்தரவிட்டார்.

இறந்தவர்களின் உடலுறுப்புக்கள் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசார் சீவல் தொழிலாளி ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

......

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்க கருத்தரங்கும், கலந்துரையாடலும் இன்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் திரு. தி ம. செல்வின் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில், இலங்கை அரசியலமைப்பும் மனித உரிமைகளும்'' என்னும் பொருள் பற்றி திரு. ரெஜி சிறிவர்த்தனவும், ''மனித உரிமைகளும் நாமும்'' என்னும் பொருள் பற்றி பேராசிரியர் ச. இந்திரபாலாவும் உரையாற்றுவர். (கெ)

......

மானிப்பாய்

## காக்கைதீவுக்கு யோகம்!

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள காக்கைதீவு மூன்மாதிரிக் கிரமமாகத் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கு ஆரம்ப நடவடிக்கையாக இங்கு 50 வீடுகளை விரைவில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரத்தினம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மாலே உங்களே
அழைக்கின்றோம்

**இலவச இன்னிசைவிழா**

அருள் இசை முரசு
நாகூர் ஹனிபாவின்
இசைக்கச்சேரி

ஜின்னுமைதானம்
அனைவரும் வருக.

பிரபல வியாபாரிகள்
**பல்கன் ஏஜென்சி**
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.


# வானத்தில் அதிசய ஒளி!

நேற்று மாலே ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் பின்னர் வானத்தில் அதிசய ஒளி ஒன்று தென்பட்டது. சிவப்பு நிற அரை நீள்வட்டத்தில் ஒளித்தடமும் அதன் மேலாக இரு ஒளிவட்டமும் காணப்பட்டன.

இரவு 7 மணி முதல் 7-30 மணிவரை இந்த ஒளி தென்பட்டது.

நேற்று நண்பகல் ஏற்பட்ட சூரிய கிரகணம் பற்றியே பரபரப்பாக பேசிக்கொண்டிருந்த மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று அவ்வொளித் தடங்களே பார்த்தனர்.


**மலிவு விற்பனே**

சிலோபெக் பொலித்தீன்
சிலோபெக் சொப்பிங்
பேக்ஸ் 2/50
சிலோபெக் சொப்பிங்
பேக்ஸ் -/50 -/75 1/-
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு

யாழ் நகர் விநியோகஸ்தர்கள்:
**CEYCO TRADERS**
43, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


## யாழ் நகர் நேற்று வெறிச்சோடிக் கிடந்தது

### மட்டக்களப்பு மக்கள் பீதி

(யாழ்ப்பாணம்)

சூரிய கிரகணம் காரணமாக நேற்று மாலே யாழ்ப்பாணத்தில் வழமையான சனநடமாட்டம் பெருமளவில் குறைந்திருந்தன. நகரே வெறிச்சோடிக்கிடந்தது.

சில ஹோட்டல்கள் உட்பட வியாபார நிறுவனங்கள் மாலேயில் பூட்டப்பட்டிருந்தன.

**மட்டுநகரில்**

(மட்டக்களப்பு)

சூரிய கிரகணம் காரணமாக மட்டக்களப்பில் பல வீதிகளில் மக்கள் நடமாட்டமே அற்றுப்போய் இருந்தது.

கடைகள், தனியார் நிறுவனங்கள் யாவும் மாலேயில் பூட்டப்பட்டிருந்தன.

மக்கள் பீதியுடன் வீடுகள் யாவற்றையும் பூட்டிவீட்டு வீட்டுக்குள்ளேயே இருந்தனர் என்றும் நமது நிருபர் தெரிவிக்கின்றார். (இ)

......

## புங்குடுதீவில் மக்கள் கடை

யாழ் விற்பனேத் திணைக்களத்தால் நிறுவப்படும் புங்குடுதீவு நிரந்தர மக்கள் கடையை இன்று காலே ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் திறந்து வைப்பார்.

யாழ். விற்பனேத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். பாலசிங்கம் தலைமையில் மேற்படி திறப்புவிழா நடைபெறும். (கொ)

## இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

அருள் இசைமுரசு நாகூர் ஹனிபாவின் இலவச இன்னிசைக் கச்சேரியொன்று இன்று மாலே யாழ்ப்பாணம் ஜின்னு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கெ)

## கிராமிய மக்கள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது. தமிழ் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள வேற்றுமையை நீக்கி, நல் எண்ணத்தை உண்டாக்க இது உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திரு. பி. சண்முகராசா, மல்லாகம் கிராம சேவையாளர் திரு. அலெக்சிஸ் ஆகியோர் மேற்படி குழுவினருக்கு வேண்டிய சகல ஒழுங்குகளேயும் மேற்கொள்ளுவர். (கொ)

## டிட்டோவை டாக்டர்கள் கைவிட்டனர்

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவின் உடல் நிலே மிக மோசமாகிவருவதைத் தொடர்ந்து அவரைக் கவனித்துவந்த டாக்டர்கள், டிட்டோவைக் காப்பாற்றும் முயற்சியில் நம்பிக்கைஇழந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

......

## சுக்கிரன் புதன் கிரகங்கள் தென்பட்டன

(புதுடில்லி)

நேற்று நிகழ்ந்த சூரியகிரகணத்தின் போது இந்திய மாநிலமான கர்நாடகத்தில் சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களே நேரடியாகக் காண முடிந்தது என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.


**விற்பனேக்கு**

தேநீர்க்கடைக்கு வேண்டிய சகல தளபாடங்களும் விற்பனேக்குண்டு. தொடர்பு: 87, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 4990

**தேவை**

சோப் (புதிய உற்பத்தி) தயாரிப்பதில் நன்கு அனுபவமுள்ள ஆண் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும். இ. ராஜா, 196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 4991

யாழ். நகர் மக்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி!

ஆவலுடன் எதிர்பார்த்திருந்த "மெற்றோ" சைக்கிள்கள்
தாராளமாக கிடைக்கின்றன ! !

இலாபகரமானது! உறுதியானது!! அதிகதூரம் சலிப்பின்றி
பயணம்செய்வதற்கு உத்தரவாதமானது!!! சொகுசானது!!!!

**METRO BYCYCLE RS. 790|- ONLY.**

வர்த்தகர்களே! வந்துவிட்டன!!

**கிலோகிராம் படி செட்டுகள்**

கவலேயின்றி உங்கள் வியாபாரத்தை பெருக்கவல்லது!

வர்த்தக விசாரணேகள்:

**சாமுவேல் சன்ஸ் அன் கோ.** லிமிட்

**SAMUEL SONS & CO. LTD.**
206 - 208, Hospital Road, Jaffna- Phone: 462



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No]GB/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org